Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 10

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்ட ஸ்தாபனம்


அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணாடி விற்பனையாளரும்
45, மெயின் வீதி, : யாழ்ப்பாணம்

# ஈழநாடு

# EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி இல. 44

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 22 ஆம் நாள் ரம்ழான் 8 (4-2-63) திங்கட்கிழமை 354

# 'தமிழ் பேசும் மக்களை ஏமாற்றிய தலைவர்கள்!'

## தேசிய ரீதியில் பிரச்னைகளுக்குத் தீர்வு

### நாட்டுமக்களுக்கு பிரதமர் விடுத்த சுதந்திரதினச் செய்தி

கொழும்பு, ஞாயிறு

"உலகிலுள்ள எந்த நாட்டுக்கும் பிரச்னைகள் இருக்கத்தான் செய்கின்றன. தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகள் பலவுண்டு நமக்கு என்பதில் ஐயமில்லை. இவற்றில் சில கட்சி அரசியல் நிலையிலிருந்து கருதப்படாமல் தேசியரீதியில் கருதப்படவேண்டியவை. இந்த நாட்டின் தேசாபிமானமுள்ள அரசியல் தலைவர்கள் தாங்கள் எக்கட்சியைச் சேர்ந்திருந்தாலும், தேசியநலனை முன்னிட்டு இவ்வாறான தேசியப் பிரச்னைகளை ராஜதந்திரமுறையில் தீர்ப்பதற்கான உதவிகளை நல்குவார்களென்பதில் எனக்கு உறுதியுண்டு."

இவ்வாறு பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இலங்கையின் பதினைந்தாவது சுதந்திரதினத்தையொட்டி நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள ஒரு செய்தியில் கூறியுள்ளார்.

இன்று அனுராதபுரத்தில் நடைபெறும் உத்தியோகபூர்வமான சுதந்திரதின விழாவில் கலந்துகொள்ளும் பிரதமர்



சிறிமா பண்டாரநாயக்கா விடுத்துள்ள செய்தியின் முழுவிரம் ஐந்தாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

## யாழ். பொதுக் கூட்டத்தில் எஸ். ஜே. வி. பேச்சு

### துக்கதினம் அனுஷ்டிக்கும் காரணம்பற்றி விளக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

'இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்களை இலங்கையின் இரு தலைவர்கள் ஏமாற்றியுள்ளனர். காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா எம்முடன் மொழிக்கொள்கை சம்பந்தமாகச் செய்துகொண்ட உடன்படிக்கையை அவராகவே கிழித்தெறிந்தார். இவ்வாறு செய்தது பெரும் அரசியல் குற்றமாகும். இதனைத் தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு எதிர்த்தே ஆகவேண்டும். 1960-ம் ஆண்டு ஜூலையில் சுதந்திரக் கட்சியும் இதேபோல் மீறியது என்று தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேற்று மாலை யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். கோட்டை மைதானத்தில் அமைக்கப்பட்ட வன்னியசிங்கம் அரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசினர்.

திரு. செல்வநாயகம் மேலும் கூறியதாவது:-

காலஞ்சென்ற பண்டாரநாயக்கா தமது மந்திரி சபையுடன் ஆலோசனை செய்த பின்னரே எம்முடன் மொழிக் கொள்கை சம்பந்தமாகச் செய்துகொண்ட ஒப்பந்தம் மீறப்பட்டது. பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எங்களுடன் சேர்ந்து செய்துகொண்ட ஒழுங்கு மீறப்பட்டது. 1960-ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் தமிழரசுக் கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஒழுங்குகள் செய்துகொண்டனர். அதன் விளைவாகவே தான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜூலை தேர்தலில் பெரும் வெற்றியீட்டமுடிந்தது. அவர் அரசாங்கத்தை அமைத்தும் எமக்களித்த உறுதிமொழிகளை காற்றில் பறக்கவிட்டனர். எம்முடன் செய்த ஒழுங்குகளை ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சி மீறியது அரசியல் குற்றமாகக் கருதப்படவேண்டும். இதனை இன்றுள்ள தமிழ் மக்கள் அனைவரும் எதிர்த்தேயாகவேண்டும். இந்த எதிர்ப்பின் முதல் அம்சமாக தமிழ் மக்கள் துக்க தினமாக சுதந்திரதினத்தை அனுஷ்டிகடேவண்டும்.

#### ஊர்வலம் ரத்து

இந்தப் பொதுககூட்டத்தின் முன் நல்லூரிலிருந்து கூட்ட மைதானத்திற்கு வரவிருந்த ஊர்வலம் வாலிப முன்னணித் தலைவர் திரு. கதிரவேற்பிள்ளையின் தாயார் காலமானதற்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக ரத்துசெய்யப்பட்டது.

#### முஸ்லிம்களைப் பாதிக்கிறது

ஜனாப மசூர் மௌலானாபேசுகையில் குறிப்பிட்டதாவது:

இலங்கைத் தமிழரசுக்கட்சி சாதாரண அரசியல் கட்சி மட்டுமல்ல. விடுதலை இயக்கமாகும். போராட்டங்களையும் இயக்கங்களையும் நடத்துவது விடுதலை விரும்புபவர்களின் நோக்கமல்ல. 1949-ம் ஆண்டு தொடக்கம் தமிழரசுக்கட்சி நடத்திய பல இயக்கங்களும், இயக்கங்களின் முடிவுகளும் மகிழ்ச்சி தருவனவாகவோ, மாறாகவோ இருக்கலாம். ஆனால் தமிழ்ப்பேசும் மக்கள் சுதந்திரமாகவும் சுபிட்சமாகவும் என்றென்றும் வாழவேண்டும் என்ற நோக்கத்திற்காக கஷ்டநஷ்டங்களைப் பொருட்படுத்தாது இரத்தத்தை — கண்ணீரைக் கண்டுகலங்காது இரவுபகலாக இக்கட்சி உழைத்துவருகிறது. என்றும் உழைத்துக் கொண்டே வரும். நாடு இன்று போய்க்கொண்டிருக்கும் நிலையைப் பார்த்தால் தமிழ்ப்பேசும் மக்களின் நிலை இன்னுமின்னும் பாதிக்கக்கூடியதாக உள்ளதே தவிர அபிவிருத்தி அடைவதாகத் தெரியவில்லை. இக்கட்டத்திலேதான் தமிழ்பேசும் மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு தியாகங்கள்பல செய்து விடுதலை இயக்கத்தை நடத்துவதற்கு முன்வர வேண்டும். யாழ்ப்பாணம் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் நேரடியாக ஒருவேளை அவர்கள் அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளினால் பாதிக்கப்படாமல் இருந்தாலும்கூட ஏனைய பகு

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று சுதந்திர தினம் தமிழ்ப்பகுதியில் துக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை சுதந்திர மடைந்த பதினைந்தாவது வருடாந்த நிறைவுதினம் இன்று நாட்டின் பலபாகங்களிலும் கொண்டாடப்படுகிறது. அநுராதபுரத்தில் உத்தியோக முறையில் சுதந்திர தினம் கொண்டாடப்படுகிறது. கோவில்கள், ஆலயங்கள், தேவாலயங்களில் இன்று காலை மணிகள் ஒலிக்க பூஜை, பிரார்த்தனைகளுடன் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகின்றன. பல்வேறு இடங்களிலும் தேசிய விளையாட்டுப் போட்டிகளும் கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அரசாங்க காரியாலயக் கட்டடங்களிலும் இதர இடங்களிலும் இன்று தேசியக் கொடிகள் பறக்கவிடப்படும்.

இதேசமயம் தமிழ்ப்பிரதேசங்களில் இன்று கடைகளை அடைத்து கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிப்பதற்கு தமிழரசுக்கட்சித் தலைவர்கள் ஒழுங்குசெய்துள்ளனர். கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிப்பதென்று யாழ்ப்பாணம் மாநகரசபையும், திருக்கோணமலை, மட்டக்களப்பு நகரசபைகளும் தீர்மானித்துள்ளன. தமிழ்ப் பகுதிகளிலுள்ள இதர ஸ்தலஸ்தாபன சபைகள் பலவும் இதேபோல் துக்கம் அனுஷ்டிப்பதென்று முடிவுசெய்துள்ளன.

தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் பலரும் தங்கள் தொகுதிகளில் துக்கம் அனுஷ்டிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

#### துக்கம் அனுஷ்டிப்பது ஏன்?

"இந்த நாட்டில் வசிக்கும் பெரும் பான்மைச் சமூகத்தினரும் எமது சகோதரர்களுமாகிய சிங்கள மக்களிடம் துவேஷம் அல்லதுவெறுப்புகொண்டு நாம் துக்கதினம அனுஷ்டிக்கவில்லை. என்று இலங்கைக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்

(8-ம் பக்கம் பார்க்க)

# செய்தித்திரட்டு

## கோரிக்கை

திருமலை, ஞாயிறு

தம்பலகமம் அரசாங்க தமிழ் உயர்நிலை பாடசாலைக்கு, விஞ்ஞான ஆய்வு கூடமொன்றை அமைத்துத் தருமாறு மூதூர் எம். பி, கல்விமந்திரி ஆகியோரைக் கேட்டுக் கொள்வதென்ற தீர்மானம் மேற்படி பாடசாலையின் பெற்றோர்-ஆசிரியசங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

∴ ∴ ∴

## புகார்

திருமலை, ஞாயிறு

கிண்ணியாவிலுள்ள பல பாடசாலைகளில் போதிய ஆசனங்கள் இல்லாததால் மாணவர்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள் என்று பாடசாலை அதிபர்கள் மூதூர் முதல் எம். பி. யிடம் புகார் செய்ததைத் தொடர்ந்து, எம். பி. கல்விஅமைச்சருடன் இது பற்றித் தொடர்பு கொண்டுள்ளார்.

∴ ∴ ∴

## கமிட்டிக்கூட்டம்

திருமலை. ஞாயிறு

தம்பலகாமம் தெற்கு உணவு உற்பத்திக் கமிட்டியின் கூட்டம் தம்பலகாமம் தெற்கு விதானையார் இல்லத்தில் திரு. பொ. சித்திரவேல் தலைமையில் நடைபெற்றது.

∴ ∴ ∴

## ரூ. 150 அபராதம்

பருத்தித்துறை, ஞாயிறு

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த சங்கரபபிள்ளை சின்னையா என்பவர் சட்டவிரோதமாகச் சாராயம் விற்றதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், பருத்தித்துறை நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் எதிரிக்கு ரூ. 150 அபராதம் விதித்துள்ளார்.

∴ ∴ ∴

## பிணையில் விடுதலை

பருத்தித்துறை, ஞாயிறு

துன்னாலையைச் சேர்ந்த ஆறுமுகம் நடேச என்பவரைப் பொல்லால் தாக்கி படுகாயம் விளைவித்ததாக துன்னாலையைச் சேர்ந்த ஏழுபேர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்டு வழக்கில் எதிரிகளை தலா ரூ 500 பிணையில் செல்ல நீதிபதி அனுமதியளித்தார்.

∴ ∴ ∴

## பெண்ணின் பெருமை

திருமலை, ஞாயிறு

பிரதமமந்திரி திருமதி பண்டாரநாயக்கா, உலகில் ஓர் பெண் பிரதமராகப் பதவி வகிப்பதன் மூலம், அரசியலில் பெண்களுக்குள்ள ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார் என்றும் உத்தியோக சேவையில் பெண்களுக்கு உரிய இடம் அளிக்க வேண்டுமென்றும் கிண்ணியா முஸ்லிம் மாதர் சங்கக் கூட்டத்தில் ஆலிமா உம்மா பேசுகையில் கூறினர்.

∴ ∴ ∴

## இடமாற்றம்

திருமலை, ஞாயிறு

தம்பலகாமம் அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய திரு. பாலசிங்கம் கொழும்புக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு திரு. கனகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

திருமலை, ஞாயிறு

தம்பலகாமம் உயர்நிலைப் பாடசாலையில் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி சீதாலட்சுமி, திருமலை சென். மேரிஸ் ஆங்கில பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

பருத்தித்துறை, ஞாயிறு

புலோலி இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. கே. சோமசுந்தரம் கரவை விக்னேஸ்வராக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது சேவையைப் பாராட்டும் முகமாக நேற்றுமாலை கல்லூரி ஆசிரியர்கள் அவருக்கு ஒரு தேநீர் விருந்துபசாரமளித்தனர்.

∴ ∴ ∴

பரந்தன், ஞாயிறு

பரந்தன் இந்து தமிழ்க்கலவன் சிரேஷ்ட பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. செ. நடராசாவுக்கும் அவரது மனைவி நாகேஸ்வரி நடராசாவுக்கும் தந்திமூலம் திடீர் இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது.

∴ ∴ ∴

## அரவம் தீண்டியது

புத்தளம், ஞாயிறு

கொட்டுக்கச்சைய என்ற இடத்தைச் சேர்ந்த எஸ். எம். சைமன் பெரேரா அரவம் தீண்டி மரணமானார்.

∴ ∴ ∴

## விதானை வீட்டில் திருடர்

அனுராதபுரம், ஞாயிறு

ஹல்மில்லவ கிராம விதானை எச். டி. பீ. லெனவல என்பவர் வீட்டினுள் திருடர்கள் கோஷ்டியொன்று பிரவேசித்து கிராமவிதானையாரையும் அவரது மனைவியையும் பயமுறுத்தி ரூ. 2000 களவாடிச் சென்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

* * *

## உணவு ஆராய்ச்சி

கொழும்பு, ஞாயிறு

உணவு ஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவ உணவு அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையம் விரைவில் நிறுவப்படுமெனத் தெரியவருகிறது.

∴ ∴ ∴

## திடீர் மரணம்

கொழும்பு, ஞாயிறு

நரான்வெல என்ற இடத்தில் வசிக்கும் பயிற்சிபெற்ற ஆசிரியர் கே. கே. சிறிவர்த்தன என்பவர் நடுநிசியில் வாந்தியெடுத்து பின்னர் மயக்கமுற்றுர். ஆனல் சிறிது நேரத்தில் அவர் மரணமானர்.

∴ ∴ ∴

## மதிய உணவு பாண்!

கல்முனை, ஞாயிறு

கல்முனை ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளர்களுக்கு மதிய உணவாக சோற்றுக்குப் பதில் பாண் கொடுக்கப்பட்டது. இதுபற்றி நோயாளர் புகார் செய்துள்ளனர்.

∴ ∴ ∴

## காணிக்கை மாதர் திருநாள்

சன்னகம், ஞாயிறு

சுன்னகம் அர்ச் அந்தோனியார் கோவிலில் காணிக்கை மாதா திருநாள் வெள்ளிக்கிழமை மாலை வேஸ்பருடன் ஆரம்பமாகி நேற்றுக் காலை மெழுகுவர்த்திசுற்றுப்பிரகாரத்துடன் சுன்னகம் கட்டளைக்குரவர் வண. கொன்சன்டைன் அடிகளார் திவ்விய பலிப்பூசை நிறைவேறியது.

வழமையாய் நடைபெற்று வரும் காணிக்கைமாதாவின் சுற்றுப்பிரகாரத்தை இம்முறை கட்டளைக்குரவர் நிறுத்தி வைத்துள்ளார்.

## தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்ற லோக இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# மாணவர்களின் குமுறல்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் படிக்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள் (H.S.C) ஒரு மாதகாலமாக தமிழ்த் துறைக்கு ஆசிரியர் இல்லாமல் அவஸ்தைப்படுகின்றோம். சென்ற வருடம் தமிழ்துறைத் தலைவராகவிருந்த பண்டிதர் சென்ற மாதம் 2-ம் திகதி மாற்றலாகிச் சென்றதைத் தொடர்ந்து இற்றவரை ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பதை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். இப்பாடசாலையில் சித்தன்கேணி, வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை முதலிய பகுதிகளிலுள்ள மாணவர்கள் கல்விகற்கின்றனர் இப்பகுதி முழுவதற்கும் இப்பாடசாலையில் தான் உயர்தர வகுப்பு இருக்கின்றது. எமக்கு அருகில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் நாம் இந்துக்களானபடியால் எம்மைச் சேர்த்துக்கொள்கிறார்களில்லை. மற்றக் கல்லூரிகளில் சேருவதும் கஷ்டமான நிலையிலுள்ளது. எனவே இந்த ஒரு பாடசாலை தான் எமக்கு கைகொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. இப்படியான நிலையில் உள்ள நாங்கள் ஒரு மாதகாலமாக தமிழ்த் துறைப் பகுதிக்கு ஆசிரியரில்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்றோம். இதைப்பற்றி கல்வி அதிகாரியோ, கல்வி இலாகாவோ அக்கறையெடுப்பதாகத் தெரியவில்லை.

இப்பாடசாலையில் படிக்கும் உயர்தர வகுப்பு மாணவர்களும், கல்விப் பொதுத் சராதர வகுப்பு மாணவர்களும், மற்றும் வகுப்பு மாணவர்களும் கஷ்டப்படவேண்டியதுதானு? மாணவர்களின் பாடவிதானம் இரண்டு வருடம் தொடர்ந்து படிப்பித்தாலே முடியாத தறுவாயிலுள்ளது. அப்படியிருந்தும் இவ்வாறு காலங்கடத்தினல் நாம் பரீட்சை எடுப்பதில்லையா? இன்றேல் பரீட்சையில் சித்தியடைவதில்லையா? மற்று பாடசாலைகளிலும் இப்படித்தான் நடைபெறுகின்றதா? இப்பாடசாலை மாணவர்கள் ஒதுக்கப்படவேண்டியதுதானு? இதற்குக் கல்விப் பகுதியோ இன்றேல் கல்வியதிகாரியோ மிகக்கூடிய விரைவில் ஆவன செய்வார்களா?

உயர்தர வகுப்பு மாணவர்

●

## பொதுமக்கள் அவஸ்தை

யாழ்ப்பாணத்திலுள்ள சகல வீதிகளும் வாகனங்களுக்கும் பாதசாரிகளுக்கும் பெருத்த இடைஞ்சல் கொடுக்கின்றன. சொட்டு மழை பெய்ததும் வீதியில் குழிகள் ஏற்பட்டுவிடுகின்றது. இதனல் குறிப்பாக சைக்கிள் ஓடுபவர்கள் பெரிதும் சங்கடப்படுகின்றனர். இந்தக் குழிகளை விலக்கி 'வெட்டி' ஓடவேண்டிய சில சந்தர்ப்பங்களில் பின்னல் அல்லது முன்னல் வரும் வாகனங்களுடன் மோதவேண்டிய நிலையும், வாகன விபத்தைத் தடுப்பதற்கு முனையும்போது குழியில் விழுந்து விபத்துக்குள்ளாக அல்லது சைக்கிள் சேதமுற வேண்டிய நிலையும் அடிக்கடி ஏற்படுகின்றது.

மோட்டார் வாகனங்களுக்கு (5-ம் பக்கம் பார்க்க)

---

## காணி எடுத்தற்சட்டம் (460ம் அத்தியாயம்)

7-ம்பிரிவின்படியான அறிவித்தல்

குறிப்பு இலக்கம்: 37266

கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் காணி எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கிறது விபரங்களுக்கு 1-2-63 வெளிவந்த 13,498ம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப்பார்க்கவும்.

விபரம்

கிராமத்தின் பெயர்......களிமடுக்கிராமம்.
பூமியின் பெயர்...ஆத்திவட்டை
பட இலக்கமும்:
துண்டும்:...... பி. பி. ஏ. 1377 ம் படத்தில் 1 - 11ம் துண்டுகள்.

ஒப்பம்

ரீ. ஏ. எல். லூடோவைக்,
உதவி அரசாங்க அதிபரும்,
காணி எடுக்கும் அதிகாரியும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

---


## வீடு வாடகை|விற்பனை, காணி குத்தகை|விற்பனை, பொருள்கள் வாங்க|விற்க இலகுவான வழி.

ஈழநாடு சிறு விளம்பர விகிதங்கள்

### விளம்பரப் பிரிவுகள்

**பிரிவு 1.**
பிறப்பு, இறப்பு, திருமணம், அழைப்பிதழ், வாழ்த்து, அனுதாப விளம்பரம், தனிப்பட்டவிஷயம், பொருள்களைக் காணவில்லை, பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன முதலியன.

பி. கு. திருமண விளம்பரமாயின், மணமக்களது கையொப்பமும், இறப்பு விளம்பரமாயின் இறந்தவரது உரிமையாளரின் கையொப்பமும் தேவை.

**பிரிவு 2.**
வேலை தேவை, வேலை காலி, விளையாட்டு வகுப்புகள், டியூசன், வர்த்தக வகுப்புகள், நடன வகுப்புகள், புத்தகங்கள், சாஸ்திரம் முதலியன.

**பிரிவு 3.**
வீடு வாடகைக்கு, விற்பனைக்கு, காணி குத்தகைக்கு, விற்பனைக்கு, வீடும் சொத்தும், தங்குமிடவசதி, தோட்டம் முதலியன.

**பிரிவு 4.**
தாவர உற்பத்திகள், தெங்குப் பொருள்கள், கோழிப் பண்ணை, கால்நடை, செடிகள், விதைகள், உரம் முதலியன.

**பிரிவு 5.**
சைக்கிள், மோட்டார் சைக்கிள், வானெலிப்பெட்டி, கடிகாரம், தையல் இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், மோட்டார் உறுப்புகள், கார்கள், லொறிகள், புகைப் படச் சாதனங்கள், தட்டெழுத்துப் பொறிகள், அலுவலக உபகரணங்கள், எஸ்டேட் சப்ளைஸ், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், டிராக்டர்கள், றெயிலர்கள், கட்டிடச் சாமான்கள் முதலியன.

**பிரிவு 6.**
வைத்தியம், மருந்துகளும் மூலிகைகளும், மருத்துவம் முதலியன.

**பிரிவு 7.**
வர்த்தக அறிவித்தல்கள், பணவசதி, ஈட்டுக்குப் பணம், வியாபார ஸ்தலங்கள் முதலியன.

**பிரிவு 8.**
ஆபரணங்கள், இசைக்கருவிகள், அழகுக்கலை முதலியன.

ரூ. 50க்குக் குறைந்த பெறுமதியான பொருள்களின் விளம்பரங்களாயின், முதல் 10 சொற்களுக்கும், ரூ. 2-00 வீதமும் அதற்குக் கூடுதலான ஒவ்வொரு சொற்களுக்கும், 10 வீதமும் அறவிடப்படும்.

விளம்பரத்தில் குறிப்பிடப்படாத விளம்பரதாரர்களின் பெயர்கள் எக்காரணம் கொண்டும் எம்மால் அறிவிக்கப்பட மாட்டாது.

'ஈழநாடு' மேற்பார்வையில் அமையும் விளம்பரங்களுக்கு நூற்றுக்கு 50 வீதம் வேருக அறவிடப்படும்.

தபாற் பெட்டி எண் குறிப்பிட்ட விளம்பரங்களாயின், மேலதிகமாக 5 சொற்கள் கூட்டி எண்ணப்படும்.

| சொற்கள் | ஒருமுறை பிரசுரிக்க. | 3ம் க்கு மேற்பட்ட பிரசுரங்களுக்கு. வீதம் |
|---|---|---|
| 15 | ரூ. 3-50 | ரூ. 3-00 |
| 16 | 3-60 | 3-10 |
| 17 | 3-70 | 3-20 |
| 18 | 3-80 | 3-30 |
| 19 | 3-90 | 3-40 |
| 20 | 4-00 | 3-50 |
| 21 | 4-10 | 3-60 |
| 22 | 4-20 | 3-70 |
| 23 | 4-30 | 3-80 |
| 24 | 4-40 | 3-90 |
| 25 | 4-50 | 4-00 |
| 26 | 4-60 | 4-10 |
| 27 | 4-70 | 4-20 |
| 28 | 4-80 | 4-30 |
| 29 | 4-90 | 4-40 |
| 30 | 5-00 | 4-50 |
| 31 | 5-10 | 4-60 |
| 32 | 5-20 | 4-70 |
| 33 | 5-30 | 4-80 |
| 34 | 5-40 | 4-90 |
| 35 | 5-50 | 5-00 |
| 36 | 5-60 | 5-10 |
| 37 | 5-70 | 5-20 |
| 38 | 5-80 | 5-90 |
| 39 | 5-90 | 5-40 |
| 40 | 6-00 | 5-50 |

40க்கு மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் சதம் 15.

# இந்தியாவுக்கு இலங்கை கம்பளி அன்பளிப்பு

## செஞ்சிலுவைச் சங்கம் இந்தியதூதரிடம் வழங்கியது

## கொழும்பு யோசனை சம்பந்தமாக இந்திய அதிகாரி விளக்கம்

புதுடில்லி, பெப்ரவரி 3

**இந்திய — சீன எல்லைத் தகராறுக்குச சமாதானச் தீர்வுகாண்பதற்கு கொழும்பு மகாநாடுகள் தெரிவித்த யோசனையை சீனு அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளாதவரையில் சீன - இந்திய பேச்சுவார்த்தை சாத்தியமில்லையென்பதில் எவ்வித மாறுதலும் இல்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் நேற்று மீண்டும் வலியுறுத்தினர்.**

### மாற்றம் எதுவும் இல்லை

சீனப் பிரதமரிடமிருந்து கடைசியாகக் கிடைத்த செய்தியில் கொழும்பு யோசனைகளுக்கு கொடுக்கப்பட்ட விளக்கங்கள் சம்பந்தமாக இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையில் இருந்த கருத்து இடைவெளி குறைந்துவிட்டதென்று இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ தெரிவித்த கருத்துப்பற்றிக் கேட்கப்பட்டபொழுதே வெளிவிவகார இலாகா அதிகாரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கொழும்பு யோசனைகள் சம்பந்தமாக எதுவிதமாறுதலோ தளர்வோ தமக்குத் தெரிந்தவரையில் இல்லையென்று அந்த அதிகாரி கூறினர்.

### இலங்கையின் கம்பளி அன்பளிப்பு

சுமார் நூறு கம்பளிப் போர்வைகளைக்கொண்ட இரு பெரிய பார்சல்கள் இலங்கையிலுள்ள ஹைகமிஷனர் திரு. பி. கே. கப்பூரிடம் கொழும்பு டரட் ரோட்டிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் வைத்து நேற்றுக் கொடுக்கப்பட்டது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் டி. ஆர். ஜான்சன் இந்த இரு பார்சல்களையும் திரு. கப்பூரிடம் வழங்கினர். சீன – இந்திய எல்லைச் சண்டையில் காயமடைந்த இந்திய ஜவான்களுக்கு கம்பளி உடைகளை அன்பளிப்பாக வழங்குமாறு ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உலகம் முழுவதற்கும் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இந்தக் கம்பளிகளை வழங்கியுள்ளது. இந்தக் கம்பளிகள் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பப்படும். இந்தக் கம்பளிகள் விநியோகிக்கும் பொறுப்பு இந்திய செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்களிடமே இருக்குமென்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் தெரிவித்தார். சீனர்களுக்கும் இந்தக் கம்பளிகள் வழங்கப்படுமென்று அவர் கூறினர்.

### இந்தியாபற்றி கிரேக்க மன்னர்

இந்தியாக்வுக்கு விஜயம் செய்துள்ள கிரேக்க மன்னரையும் ராணியையும் கௌரவிக்குமுகமாக இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்றிரவு விருந்துபசாரமொன்றளித்தார். இந்த விருந்தில் கிரேக்க மன்னர் பேசுகையில், இந்திய அறநெறிக் கருத்துக்களால் ஊட்டம்பெருத கலாசாரமே உலகில் இல்லையென்று கூறினர். சமீபத்திய சம்பவங்களை கிரேக்க மக்கள் உன்னிப்பாகக் கவனித்துவந்தனரென்றும் இந்திய மக்களின் ஒற்றுமை நிலையைக் கண்டு அவர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனரென்றும் என்னதான் நேர்ந்தாலும் இறுதியில் இந்தியா வெற்றிபெற்று அதன் பண்படைய புகழை நிலைநாட்டிக்கொள்ளுமென்பதில் தமக்கு நம்பிக்கை இருக்கிறதென்றும் - றினு.

### தங்கத்தில் முதலீடுசெய்வது விவேகமல்ல

இந்திய நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் நேற்று உதயபூரில் ஒரு வைபவத்தில் பேசுகையில் தங்கத்தில் தங்கள் சேமிப்புக்களை முதலீடுசெய்வது விவேகமானதல்லவென்றும் தேசிய அபிவிருத்திக்கு மக்களின் சேமிப்பு உதவுவதனுல் மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மையேற்படுமென்றும் கூறினர். 14 காரட் தங்கத்துக்குள் நகை செய்யமுடியாதென்பதைத் தாம் ஒப்புக்கொள்ளமுடியாதென்றும் தனித் தங்கத்தில் நகைகள்செய்யும் பழக்கத்தை மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் திரு. தேசாய் கூறினர்.

### பொற்கொல்லருக்கு வேறு வேலைகள்

தங்கக் கட்டுப்பாட்டு விதிகள் அமுலுக்கு வந்துள்ளதால் பொற்கொல்லர்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர் என்று தமிழ்நாடு மேல் சட்டசபையில் நேற்றுக் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புப் பிரேரணை சம்பந்தமாக தொழில்மந்திரி ஆர் வெங்கட்ராமன் பேசுகையில் வேலையிழந்துள்ள பொற்கொல்லர்கள் வேறு வேலை தேடிக்கொள்வதற்கு வேலை தேடிக்கொடுக்கும் தொழில் நிலையங்களில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளலாம் என்று கூறினர்.

### கவர்னர் உரைக்கு நன்றி

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை தமிழ்நாடு மேல், சட்டசபை நேற்று ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. நன்றிதெரிவிக்கும் பிரேரணைமீதான விவாதத்துக்குப் பதில் அளித்து மந்திரி ஆர். வெங்கட்ராமன் பேசுகையில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு எதிர்க்கட்சியினர் திருத்தம் எதுவும் கொண்டுவராதது நாட்டின் இன்றைய நிலையில் நாட்டின் ஒற்றுமையை எடுத்துக்காட்டுகிறது என்று கூறினர்.

### ராவல்பிண்டி உடன்பாட்டுக்கு முரண்

ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்வது இந்திய – பாகிஸ்தான் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் வெற்றியளிப்பதற்கு ஒரு வழியாக அமையும் என்று பாகிஸ்தான் வெளிவிவகாரக் காரியதரிசி தெஹ்லவி ஸ்டாக் ஹோமில் கூறியதாக வெளிவந்த செய்திபற்றி இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரியொருவர் குறிப்பிட்டு, இது, ராவல்பிண்டியில் நடைபெற்ற இந்திய – பாகிஸ்தான் மந்திரிகளின் பேச்சுவார்த்தைகளின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்ட உடன்பாட்டு விதிகளுக்கு முரணானவையென்று கூறினர். இந்திய–பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகள் முடிவடையும்வரை அந்தப் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்கக்கூடியமுறையில் இந்திய – பாகிஸ்தான் மந்திரிகளோ, அரசாங்கத் தலைவர்களோ, அதிகாரிகளோ, பத்திரிகைகளோ எத்தகைய கருத்துக்களையும் வெளியிடக்கூடாதென்பது ராவல்பிண்டி பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட உடன்படிக்கையாகும். "ஷேக் அப்துல்லா நீதிமன்றத்தில் விசாரணையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிருர். அவர் தமக்காக வாதாடுவதற்கு வழக்கறிஞர்களை அமர்த்திக்கொள்ளவும் தமது கட்சியை எடுத்துச்சொல்லவும் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிருர். தமது சார்பில் வாதாடுவதற்கு வெளிநாட்டு வழக்கறிஞர்களை அமர்த்தியும் இருக்கிருர். எனவே இதுபற்றி பாகிஸ்தான் அதிகாரியொருவர் அபிப்பிராயம் கூறுவது முறையற்றது" என்று வெளிவிவகார அமைச்சு அதிகாரி தெரிவித்தார். பாகிஸ்தானில் விசாரணை எதுவுமின்றி நூற்றுக்கணக்கானோர் காவலில் வைக்கப்பட்டிருககிருர்களென்பதையும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினர்.

## சிங்கப்பூரில் இடது சாரியினர் நூறுபேர் கைது

### மலேசியா திட்டத்தை எதிர்த்தவர்கள்

மலாக்கா, பெப். 3

சிங்கப்பூரில் இடதுசாரிக் கட்சியினரும் தொழிற்சங்கவாதிகளும் நூற்றுக்கு மேற்பட்டோர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். உத்தேச 'மலேசியா' சம்மேளனத் திட்டத்துக்கு இவர்கள் இடையூறு செய்து வந்ததனுலேயே இவர்களைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சிங்கப்பூர் பிரதமர், பிரிட்டிஷ் பிரதிநிதி, மலாயா உயர்தர அதிகாரியொருவர் ஆகியோரின் மகாநாடொன்று நடைபெற்று முடிந்ததும் கைது செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

சிங்கப்பூர் சுதந்திரமடையுமுன்னர் காவலில் வைக்கப்பட்டிருந்த கம்யூனிஸ்ட்களும் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

பெருமளவில் இடதுசாரியினர் கைதுசெய்யப்பட்டுள்ளதை தொழிற்சங்கத் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

## 'வெளிநாடுகளில் இந்திய பிரசாரம் குறைவு'

### கம்யூனிஸ்ட் தலைவர் கவலை

புதுடில்லி, பெப். 3

இந்திய வெளிவிவகார இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் இந்திய-சீன எல்லைத் தகராற்றில் இந்தியா கடைப்பிடித்துவரும் கொள்கையைப் பிறநாட்டினர் புரிந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் பிரசாரம் செய்யவில்லை என இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. டாங்கே புகார் செய்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பியுள்ள திரு. டாங்கே இந்திய அரசாங்கத்தின் வெளிவிவகாரப் பகுதி வெளிநாடுகளுக்கு தனது நிலைபற்றி விளக்க இன்னும் அக்கறை காட்டியிருந்தால் மற்ற நாடுகள் இதை நன்கு புரிந்து அந்நாடுகளின் அனுதாபம் கிடைத்திருக்கும் எனத் தெரிவித்தார்.

ரஷ்ய பிரதமர் திரு. குருஷ்சேவுடனும் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடனும் இந்திய- சீன எல்லைத்தகராறு பற்றி தாம் நடத்திய பேச்சுவார்த்தையில் சீனுவின் நடவடிக்கை பற்றி சகலரும் அதிருப்தி கொண்டுள்ளதாக திரு. டாங்கே குறிப்பிட்டுள்ளார்.

திரு. டாங்கே மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எல்லைத் தகராறுக்காக இவ்விதம் சீனு இராணுவ முஸ்தீப்பில் இறங்கியதால் பிற்போக்கு சக்திகள் கொண்டுள்ள கொள்கைக்குப் பலம் கிடைத்துள்ளது. அதாவது திரு நேருவின் நடுநிலைமைக் கொள்கையை எதிர்த்து வந்தவர்கள் கை ஓங்கியுள்ளது. சீனுவினுல் உருவாக்கப்பட்ட இந்த நெருக்கடி நிலையை தனக்கு சாதகமாக வைத்துக்கொண்டு அமெரிக்கா சந்தர்ப்பத்தை பயன்படுத்த பார்க்கிறது. இதனுல்ஜனநாயக சக்தியின் வளர்ச்சி தடைப்படுத்தப்பட்டிருக்கிறது.

#### விளககப் படங்கள் தெளிவாக இல்லை

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களில் இந்திய அரசாங்கம் தனது நிலைபற்றி விளக்க இந்திய எல்லைகளைத் தெளிவாகத் தெரிவிக்கும் படங்களை அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக செய்வதற்கான நடவடிக்கை எடுக்காதது ஆச்சரியப்படத்தக்க விஷயம்.

அந்த நாடுகளிலுள்ள எமது தூதரகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள படங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கும் எல்லைகள் சந்தேகங்களைப் போக்குவதற்குப் பதில் குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றன

சீனு இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய வர்ணப் படங்களை அங்கு விநியோகம் செய்துள்ளது.

இந்தியா தனது நிலைபற்றி தெரியவைப்பதும் திருப்திகரமாகவில்லை.

---

### விமானங்கள் மோதி 78 பேர் பலி

லண்டன், பெப். 3

துருக்கி டகோட்டாவிமானப் படையைச் சேர்ந்த டகோட்டா விமானமொன்றும் வைகவுண்ட் விமானமொன்றும் அங்காரா என்னுமிடத்தில் மோதியதால் 78 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த விமானங்களிரண்டும் நொருங்கி விழுந்த இடம் நகரப்புறமாக இருந்ததால் 37கடைகள் சேதப்படுத்தப்பட்டன. ஒரு வங்கியிலிருந்த ஊழியர்களும் வாடிக்கைக்காரர்களும் காயமுற்றனர்.

---

### கடாங்காபடை விசுவாசம்

#### ஷோம்பே அறிவிப்பு

எலிஸபெத்வில்லி, பெப். 3

கடாங்கா ராணுவத் தலைவர்களை லியப்போல்ட் வில்லிக்கு அனுப்பி மத்திய அரசாங்கத்துக்கு விசுவாசம் தெரிவித்து பிரமாணம் எடுக்கச்செய்யத் தீர்மானித்துள்ளதாக ஷோம்பே அறிவித்துள்ளார். ஆனுல் கடாங்கா படைத்தளபதியை அவர் அனுப்பமாட்டாரென்று கூறப்படுகிறது. படைத்தளபதியையும் லியப்போல்ட் வில்லிக்கு அனுப்பவேண்டும்என்று ஐ. நா. கேட்டிருந்தது.

---

### இந்தியாவின் வெள்ள உதவி

புதுடில்லி, பெப் 3

மொரோக்கோவில் அண்மையில் ஏற்பட்ட பெரும் வெள்ளம் காரணமாக, இந்திய அரசாங்கம் பத்தாயிரம் ரூபாய் பெறுமதியுள்ள மருந்துகளை அனுப்பியுள்ளது.

---

### வர்த்தகபேச்சு

சிட்னி, பெப். 2

பிரிட்டன் ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேராவிட்டால், பிரிட்டன் வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளை ஆஸ்திரேலியா ஆரம்பிக்கும் என்றும் ஆஸ்திரேலிய உதவி பிரதமர் அறிவித்துள்ளார்.

## மணி வாக்கு

உண்மை ஜனநாயகம், அல்லது பொதுமக்களின் சுயராஜ்யம், உண்மையற்ற அல்லது பலாத்காரமான முறைகளில் கிடைக்க முடியாது. எதிர்ப்பையும் எதிராளிகளையும் பலாத்காரமாக ஒழிப்பது, தனிப்பட்டவர் சுதந்திரத்தைக் காக்காது. கலப்பற்ற அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட ஆட்சியே தனிப்பட்டவர் சுதந்திரத்தைக் காக்கும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 22உ (4-2-63)


## பிரதமமந்திரி அவர்களுக்கு

இலங்கையின் பதினைந்தாவது சுதந்திர தினத்தை அநுராதபுரத்திலே தாங்கள் கொண்டாடும் இச்சமயத்திலே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கறுப்புக்கொடி ஏற்றி மக்கள் தங்கள் துக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதைத் தாங்கள் அறிந்திருக்கலாம்.

அந்நிய ஆட்சியிலிருந்து தங்கள் தாய்நாடான இலங்கை விடுதலையடைந்ததைக் குறித்து தமிழ்ப் பேசும் மக்களுக்குமிக மகிழ்ச்சிதான். இதில் தங்களுக்குச் சற்றும் சந்தேகம் வேண்டாம். முதல் சுதந்திர விழாவிலே அவர்கள் எவ்வளவு உற்சாகத்துடன் பங்குபற்றினரென்பதைத் தங்களுக்கு நினைவூட்டுகின்றோம்.

ஆனால் சுதந்திரம் கிடைத்ததும், இந்நாட்டிலே மூன்றில் ஒரு பங்கினராகவுள்ள தமிழ்ப்பேசும் மக்களின் வாக்குரிமை மொழியுரிமை முதலிய பல அடிப்படை மனித உரிமைகளும் படிப்படியாகப் பறிக்கப்பட்டன. இத்துடன் வகுப்புக் கலவரங்களும் தங்கள் கணவனின் ஆட்சிக்காலத்திலே கிளம்பி, சொல்லொணாத் துன்பங்களுக்குத் தமிழ்ப்பேசும் மக்கள் எப்படியெல்லாம் உள்ளாக்கப்பட்டனரென்பதைத் தங்களுக்கு விளக்கத் தேவையில்லை.

தாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்பு, நாட்டில் வகுப்புக் கலவரங்கள் எதுவுமில்லைதான். அவசரகால பிரகடனம் செய்து அவ்வித கலவரங்கள் தலைதூக்காமல் செய்தீர்கள். ஆனால் தங்கள் அடிப்படை உரிமைகளை இழந்து, நாட்டு நிர்வாகத்திலும் தங்களுக்கு எவ்வித பங்குமில்லை, கல்வித்துறைகளிலும் ஒதுக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருவதை உணர்ந்து வரும் தமிழ்ப்பேசும் மக்களுக்கு இந்த சுதந்திரவிழாவிலே எப்படிஉற்சாகமோ மகிழ்ச்சியோ இருக்க முடியும்?

சுதந்திரதினம் பற்றி தாங்கள் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் இந்நாட்டின் ஐக்கியத்தைப் பற்றி [illegible] தீர்க்கத் தாங்கள் [illegible] முயற்சியைப்பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள். உள்நாட்டிலே பலபிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டி இருக்கையில் அந்த வெளியார் தகராறைத் தீர்க்க தாங்கள் முற்பட்டது குறித்து சிலர் தங்களைக் குறை கூறுவதாகச் சொல்லி, அதற்கு சமாதானமும் தெரிவிக்கின்றீர்கள். அண்டை நாடுகளில் அமைதி நிலவ வேண்டியது மிகவும் அவசியமே. அதற்காகத் தாங்கள் எடுத்த மேலான முயற்சிக்காகத் தங்களைப் பெருமையுடன் பாராட்டுகின்றோம். ஆனால் உள்நாட்டிலே இதேசமயம் பலபிரச்னைகள் இருப்பதைத் தாங்கள் மறுக்க முடியாது. அவற்றைத் தீர்ப்பதுபற்றித் தங்களது அறிக்கையிலே ஒரு வார்த்தையும் கூறாதது மிகவும் ஏமாற்றமளிப்பதாக இருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவரான திரு. டட்லி சேனநாயக்காவைத் தாங்கள் அழைத்துப் பேசியதுடன், சர்வகட்சித்தலைவர்களையும் அழைத்துத் தாங்கள் மகாநாடுகூட்டிப்பேச உத்தேசித்திருப்பதாகவும் செய்திகள் அடிபட்டன. நமது உள்நாட்டுப் பிரச்னைகளுக்கு விமோசனம் பிறக்கலாமென்ற புதிய நம்பிக்கையும் பிறந்தது. இதுபற்றித்தங்களது சுதந்திர தின அறிக்கையிலே ஏன் தாங்கள் ஒன்றுமே குறிப்பிடவில்லை, அவ்வித உத்தேசம் தங்களுக்கு எதுவுமில்லையா?

தமிழ்ப்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளைப்பற்றி ஒன்றுமே பேசாமலும் அவற்றை நிறைவேற்ற எவ்வித முயற்சியுமெடுக்காமலும் எல்லாம் அப்படியே விட்டுவிட்டால் தானாக நிலைமை சரியாகிவிடுமென்று தங்களுக்குயாரும் யோசனை கூறியுள்ளனரா? அப்படியாயின் அது பெருந் தவறாகும்.

வேறு விஷயங்களில் கருத்து வேற்றுமை இருப்பினும், தங்கள் அடிப்படையான மொழி, வாக்குரிமை முதலியவற்றைப் பெற வேண்டியதில் அவர்களிடையேஎவ்வித வேற்றுமையும் கிடையாது. இவ்வுரிமைகள் அவர்களதுஉயிர்போன்றவை. அவற்றைப் பெறுதவரை, இந்நாட்டிலே தாங்கள் சுயமரியாதையுடன் சுதந்திரமாக வாழ முடியாதென்பதை அவர்கள் உணர்வர். எப்படியும் அவற்றைப் பெற அவர்கள் உரிமைப் போராட்டத்தைக் கைவிடமாட்டார்கள். மீண்டும் போராட்டம் நடக்கவும் அடக்குமுறை தாண்டவமாடவும் நாடு குட்டிச்சுவராகவும் வேண்டியதுதானு?

சிங்களவரும் தமிழரும் இந்நாட்டின் இருகண்கள் போன்றவர்கள். இருசமூகத்தினரும் ஒத்துழைப்பதில்தான் இந்நாட்டின் முன்னேற்றம் அடங்கியுள்ளதென்பது தாங்கள் அறியாததல்ல. நாட்டின் முன்னேற்றத்துக்காக ஒத்துழைக்க தமிழ்ப்பேசும் மக்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ஆனால் தங்கள் மானத்தையும், அடிப்படை உரிமையையும் பாதுகாத்துக் கொள்வது தங்கள் முதல் கடமை என்று உணர்கின்றனர். தேசிய நன்மையை முன்னிட்டு தாங்கள் இவ்விஷயத்தை அனுதாபத்துடன் கவனித்து தமிழ்பேசும் மக்களின் பூரண ஒத்துழைப்பையும் பெறும்வகையில் தாராளமனதுடன், அரசியல் ஞானத்துடன் உடன் நடவடிக்கை எடுத்து அடுத்த ஆண்டிலாவது இந்நாட்டிலுள்ள எல்லா மக்களும் சுதந்திரதினத்தை மிகமகிழ்ச்சியுடனே ஏகோபித்துக் கொண்டாடச் செய்வீர்களென்ற பெருநம்பிக்கையுடனே [illegible] எழுதுகின்றோம்.

---

# இலங்கைபெற்ற சுதந்திரத்தில் தமிழினத்தின் இன்றைய நிலை

(டாக்டர் இ. எம். வி. நாகநாதன்)

**உலக சரித்திரத்தில் நாம் படித்தறிந்த பழைய கதையே இலங்கையில் புதிய நிகழ்ச்சியாக கண்முன்னே நடைபெறுகிறது. அரசியல் அதிகாரங்கைக்கு வந்தவுடனே எண்ணிக்கையில் பெரியதான ஒரு கூட்டம் மற்றைய சிறுபான்மை வகுப்பினரை விழுங்கிவிட, அதே எண்ணமும் இலக்குமாக முயற்சித்து வருகிறது. இன்றைய உலகம் ஒப்புக்கொள்ளமாட்டாதகெடுபிடிச் சட்டங்களை இயற்றி மனுக்குல தர்மத்திலிருந்தே பிறழ்ந்துவிட்ட அந்த வல்லாளர் ஆட்சி கொண்டாடும் அர்த்தமற்ற சுதந்திரத்தில் சிறுபான்மை இனமான தமிழ்பேசும் மக்கள் எப்படி கலந்துகொள்ளமுடியும்?**

இன்று சுதந்திர தினம். இலங்கை சுதந்திரமடைந்து இன்றோடு 15 ஆண்டுகளாகின்றன. சென்ற 15 ஆண்டுகாலத்தில் இலங்கை பெற்ற சுதந்திரம் தமிழ் பேசும் இனத்தைப் பொறுத்தவரை அவர்களுக்கு என்ன கருத்தமைய இருந்து வருகிறது? இனி வருங்காலத்தில் அவர்களுக்கென்று அது வைத்திருப்பதுதான் என்ன?

அநுராதபுரத்திலும் வேறு பகுதிகளிலும் சுதந்திர தினத்தை உத்தியோகப் பற்றுதலாகக்கொண்டாடுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கும் இதே தினத்தில் வட, கீழ் மகாணங்களில் அங்குள்ள கிராமங்களிலும் பட்டினங்களிலும் துக்கம் கவிந்த நிலை சூழ்ந்திருக்கிறது. தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் இது துக்கதினமாகியிருக்கின்றது.

சிங்கள மக்களுடன் என்றைக்கும்போல் நேசப்பான்மையுடன் சரிநிகர் அந்தஸ்து பெற்ற ஒரு தனிஇனமாக வாழ முடியுமென்ற அவர்களது எண்ணம் மண்ணோடு மண்ணாகிவிட்டது. தங்கள் சுதந்திர வாழ்வில் நம்பிக்கையே இழந்து போயிருக்கிறார்கள்; பழையதொரு ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுபட்டு அதைவிட மோசமானதாகத் தோன்றும் மற்றொரு அந்நியர் ஆட்சிக்குள் அகப்பட்டுக்கொண்டது போல விழிக்கும்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் தான் இன்று அவர்களுக்குத் துக்கம்.

எந்த ஒரு அந்நியர் ஏகாதிபத்திய ஆட்சியாவது எந்த நாட்டிலும் நீண்டகாலத்துக்கு நிலைபெற்றதில்லை என்பது உலக சரித்திர வரலாறுகண்ட முடிவு. சிலகாலத்துக்குள்ளாக முந்தியோ பிந்தியோ அந்த நாட்டுக்கே ஒன்றில் திரும்பிப் போயிருப்பார்கள். அல்லது அவர்கள் கட்டி ஆண்ட மக்களால் கவரப்பெற்று அவர்கள் வசமாகியிருப்பார்கள். உலக சரித்திர வரலாறு மற்றுமொரு உண்மையை நமக்கு புலப்படுத்துகின்றது. ஒன்றுக்கு மேற்பட்ட பல மொழிகள் வழக்கிலிருந்து வரும் ஒருநாட்டிலும் ஒன்றுக்கு மேற்பட்ட பலஇனங்கள் வாழும் ஒரு நாட்டிலும் குறிப்பிட்ட ஒரு மொழி பேசும் வகுப்போ அல்லது ஓர் இனமோ கட்டுமட்டற்ற அரசியல் அதிகாரம்பெற்றால் அது அந் நாட்டிலுள்ள மற்றைய எல்லா சிறுபான்மை வகுப்பினரையும் இனங்களையும் கண்மூடித்தனமாக அழித்துவிடும்.

இதற்கு உதாரணம் காட்ட வேண்டுமானால் இன்றுஐக்கிய அமெரிக்க இராச்சியமாயிருக்கும் முன்னைய வடஅமெரிக்காவில் குடியேறிய வெள்ளை இனத்தவர் அந்நாட்டின் புராதன குடிமக்களான சிவப்பு இந்தியரை முற்றாக ஒழித்துத் தீர்த்திருப்பதைச் சொல்லலாம். இதேமாதிரியான சம்பவமே கனடாவிலும் நிகழ்ந்தபோதிலும் சிறு தொகையினராக அங்கு குடியிருந்த சிவப்பு இந்தியருக்கு அவர்கள் தமக்கென்று காணி நிலம், பொருள் பண்டம்கல, கலாச்சாரம் என உரிமை அனுபவித்து வாழக் கூடியதாக ஒரு பிரதேசம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அமெரிக்காவில் சம்பவித்தது போல அவுஸ்திரேலியாவிலும் அந்நாட்டின் பூர்வகுடிமக்கள் விரட்டி ஒழிக்கப்பட்டிருக்கிறார்கள். நியூசிலாந்தில் இன்று முற்போக்கான அபிவிருத்தி கண்டு வாழ்ந்துவரும் மேயோரிஸ் இனத்தினர். இம்மட்டில்ஏதோ தப்பிப் பிழைத்திருப்பதேதேசிய இன அந்தஸ்து அவர்களுக்கு அளிக்கப்பட்டதனால் தான். தேசத்திலிருந்தே துரத்தப்படும் நிலையை அடைவதற்குள்ளாக தேசிய இன அந்தஸ்து அவர்களைக் காப்பாற்றி வைத்தது!

தேசிய இன அந்தஸ்துள்ள தனித்தொகுதி அமைப்பானது ஒருதனி மகாணமோ அல்லது சமஷ்டி அமைப்புக்குள்ளான மாகாணமோ கூட அல்ல. அது ஒரு சுயாட்சிப் பிரதேசமும் ஆகாது. ஒரு பாதுகாப்புத் தொகுதி என்று வேண்டுமானால் சொல்லலாம். ஒருநாட்டின் பூர்வகுடிமக்களுக்கு அவர்களின் பாரம்பரியமான நாகரிகம், கலை கலாசாரம் ஆகியன அந்நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் மற்றொரு வகுப்பின் அரசியல்அதிகாரத்தினாலும் பொருளாதார செருக்கினாலும் நசித்தொழிக்கப்படாதவாறு பாதுகாப்புஅளிக்கப்படுகிறது. இதுமாதிரி பாதுகாப்புத் தொகுதிகள் பல பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் விக்டோரியா மகாராணியினால் நிறுவப்பட்டிருந்தன.

மொழியாலும், இனத்தாலும் வேறுபட்ட வகுப்பினர் வாழும் ஒருநாட்டில் மற்றவர்களைவிடக் கூடுதலான செல்வாக்கு அடைந்த ஒரு வகுப்பினர் அரசியல் அதிகாரம் தங்கள் கைக்கு வந்தபோது மற்ற வகுப்பினரின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் முடிவாக அவர்களது அடிப்படை மனித உரிமைகளையுமே பறிமுதல்செய்து கொண்டு மனித சமூகத்தின் மத்தியிலிருந்தே அவர்களை ஒதுக்கிவைத்துவிட்ட சம்பவங்கள் தென்னாபிரிக்காவிலும் கென்யாவிலும் அமெரிக்கதென்பகுதி இராச்சியங்களில் ஒருமட்டிலுமநடைபெற்றிருப்பவை உதாரணத்துக்கு மேலும்எடுத்துக்காட்டலாம்.

உலகசரித்திரம் கூறும் இந்தப் பழைய கதைதான் நமது நாடான இலங்கையில் புதிதாக நடைபெறத்தொடங்கியிருக்கிறது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்ட பௌத்த சிங்களக்கூட்டம் மனமார உணர்ந்தோ உணராமலோ அல்லது தெரிந்தோ தெரி

(5-ம்பக்கம் பார்க்க)

---

## ஐயாறன் எழுதுவது

தமிழருக்கு மொழி வெறி உண்டா இல்லையா? சிறிதும் கிடையாதென்பதற்கான அத்தாட்சியை நேற்று நல்லூரிலே கண்டேன். சங்கீத வித்வத் சபையின் ஆதரவில் நடந்த ஸ்ரீ தியாகராஜ உற்சவத்தில், பாடியதெல்லாம் தெலுங்குப் பாட்டுக்கள். பாடியவர் எல்லாரும் தமிழர்.

எதில் தனிச் சிறப்பு உள்ளதோ அதையெல்லாம் எவ்வித வேற்றுமையும் பாராமல் நுகர்ந்து அனுபவிக்கும் சக்தியும், விரிந்த மனப்பான்மையும் தமிழருக்கு உண்டென்பதை அந்த விழா காட்டியது. இன்றேல் தமிழ் குழந்தைகளும் இப்பாட்டுகளை ஆர்வத்துடன் கற்று அழகாகவும் பெருமையாகவும் பாடுவார்களா?

திருவையாற்றிலே இந்த விழா எப்படி நடக்குமோ, அதே போலவே இங்கும் கொண்டாடினராம். காலையிலே "உஞ்ச விருத்தி" பஜனை நடைபெற்றது. மற்ற வித்வான்களுடனே, சபைத் தலைவரான மணிபாகவதர், தெருவில் ஸ்ரீ தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டு வர, ஒவ்வொரு வீட்டிலுள்ளவர்களும், அரிசியும் பணமும் காணிக்கையாகச் செலுத்தி வணங்கினராம். சேர்ந்த இந்த அரிசியைக் கொண்டு இரவில் சமைத்து, அன்னதானம் நடைபெற்றதாக அறிந்தேன். பணமும் ரூபா 36 சேர்ந்துவிட்டதாம், நம் மக்களுக்குத்தான் எவ்வளவு தர்ம சிந்தை!

* * *

காலையில்சங்கீதவித்வத்மணி மூர்த்தி ஐயரின் இனிமையான குழலோசையுடன் விழா ஆரம்பமாயிற்று. பின்னர் பஞ்சரத்ன கீர்த்தனைகளை வித்வான்கள், பல பக்கவாத்தியங்கள் சகிதமாக பக்தியுடன் பாடினர். இப்பாட்டுகளின் கருத்து விளங்காவிடினும், காதளவில் கேட்கும்போதே தனி இன்பமாகவும் பக்தி வளர்ப்பதாகவும் இருந்தது. "பலபல கெட்ட நடத்தை உள்ள என்னையும் காத்தருள ஹேராமா!" "எவ்வளவோ மகானுபாவர்கள், எல்லோருக்கும் வணக்கம்" என்பது போன்ற கருத்துக்களடங்கிய அந்த ஐந்து ரத்னங்களான கீர்த்தனைகளுக்கு, தமிழில் அர்த்தத்தை விளக்கி ஸ்வரத்துடன் வெளியிட்டால் பலருக்கும் பயனபடலாம்.

ஐந்து கீர்த்தனைகளும் பாடத் தெரிந்தவர் அபூர்வம் ஆனால் நல்லூரிலே இந்த ஐந்தையும், ஹரிகேச நல்லூர் சுந்தரமையர் பாடியது குறிப்பிடத் தக்கது. மகாராஜபுரம் சந்தானமும், அவர் சீடர் வர்ண குலசிங்கமும் இதில் கலந்து கொண்டனர். இங்கு கோஷ்டியாக வித்வான்கள் பலர் மேலுக்கு சட்டை அணியாமல் பக்தி சிரத்தையுடன் சேர்ந்து பாடிய அபூர்வக் காட்சி மனதைக் கவர்ந்தது.

இந்த விழாவிலே "கானம்" என்ற இசைச்சஞ்சிகையையும் வித்வத்சபையின் ஆதரவில் வெளியிட்டனர். இசையைப் பற்றியும், இசையாளரைப்பற்றியும் "போட்டி பொறாமை எதுவுமின்றி" பல பயனுள்ள கட்டுரைகளை வெளியிட்டு, இசைக்கலைக்கும் கலைஞர்களுக்கும் தொண்டு செய்வதே தங்கள் நோக்கம் என்று இதில் தெரிவித்துள்ளனர்.

சங்கீதபூஷணம் வேலாயுத பிள்ளை இதன் ஆசிரியராவார். இவரை 'ஈழத்து சாம்பமூர்த்தி'யென்றும் கூறுவராம். சஞ்சிகையுடன் நிறுத்தாமல் பல இன்னிசைக் கச்சேரிகளுக்கு மதாமாதம் ஒழுங்கு செய்யப் போவதாகவும் பல இடங்களுக்கும் சென்று இசைக்கச்சேரிகளுக்கும் ஒழுங்கு செய்யவும் சபை திட்டமிட்டிருக்கிறதென்பதைக் கேட்க மிக

(5ம்பக்கம் பார்க்க)

# "எமது சுதந்திரத்தைப் பாதுகாக்க அதிக சிரத்தை எடுக்கவேண்டும்"
# தேசிய ரீதியில் பிரச்னைகளுக்கு தீர்வுகாண வேண்டும்"
## பிரதமரின் சுதந்திரதினச்செய்தி

கொழும்பு, ஞாயிறு

சுதந்திர தினத்தையொட்டி பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தி:-

எமது சுதந்திரத்தின் பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழாவை புனித நகரமான அநுராதபுரத்தில் இன்று நாம் கொண்டாடுகிறோம். எமது நாகரிகமும் கலாசாரமும் ஒரு காலத்தில் செழித்தோங்கி வளர்ந்த இந்நகரம் காலக்கிரமத்தில் காடுமண்டி உருகுலைந்தது. புராதனக் கட்டிடங்களின் அழிபாடுகளே அம்மகத்தான காலத்தை எமக்கு நினைவுறுத்துபவைகளாக விளங்குகின்றன. எமது மக்களால் ஒரு காலத்தில் கண்ணேபோல் பேணிப் பாதுகாக்கப்பட்ட அனைத்தையும் நானூறு ஆண்டுகட்கு மேற்பட்ட அந்நியரின் ஆதிக்கம் அழிந்துவிட்டது. இக்காரணத்தினலேயே புதிதாக பெற்றுக்கொண்ட எமது சுதந்திரத்தைப் பாதுகாக்க நாம் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். தேசங்கள் ஒன்றையொன்று சார்ந்துவாழும் இவ்வுலகில் தனித்தும் பிறநாடுகளுடன் தொடர்பு வைத்துககொள்ளாமலும் இருப்பதால் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ளவோ அதனை ஒழுங்காக இயங்கச் செய்யவோ முடியாது. ஒரு சில வாரகாலத்துக்கு முன், கொழும்பு மகாநாட்டுக்குப் பின், சீன, இந்தியா ஆகிய நாடுகளுக்கு நான் தூது சென்றபோது, எமது நாட்டிலேயே பல பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டியிருக்கும் நேரத்தில் மற்றவர்களின் பிரச்னைகளைத் தீர்க்க நான் ஏன் பிரயத்தனப்படவேண்டுமென்பதை அறிய இந்நாட்டிலுள்ள சிந்தனையற்ற சிலரும் வெளிநாடுகளிலுள்ள சுயநலத்தில் சிரத்தைகொண்ட சில கட்சியினரும் விரும்பியதோடு எனது தூதைப்பற்றி குறைகூறவும் செய்தார்கள்.

### நடுநிலைமைக் கொள்கையின் சிறப்பு

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும், அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும் சரி எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரி, பிரச்னைகள் இருக்கத்தான் செய்கின்றன. மேலும் பிரச்னைகள் இடையறுது கிளம்பியவண்ணமாகவே இருக்கின்றன. ஆனல் இன்று நாம் வாழும் உலகத்தில் எந்த நாடும் பரிபூரண திருப்தியுடன் தனித்து வாழ்வது சாத்தியமாகாது. உலகில் ஏதோ ஒரு தூரப்பகுதியில் ஏற்படும் நிகழ்ச்சிகள் இதர பகுதிகளைப் பாதிக்கின்றன. உதாரணமாக, இந்நாடு அதிகம் நம்பியிருக்கும் எமது ஏற்றுமதிப் பொருட்களின் விலைகள், எமது கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்ட வெளிநாடுகளில் ஏற்படும் நிகழ்ச்சிகளால் அடிக்கடி பாதிக்கப்படுகின்றன. எமது நாட்டை அடுத்துள்ள உபகண்டத்தில் ஏற்படும் நிகழ்ச்சிகள் இந்நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம். 1948-ம் ஆண்டு எமக்கு சுதந்திரம் வழங்கப்பட்டதற்கு அக்காலத்தில் இந்தியாவில் இருந்த சுதந்திர இயக்கத்தின் செல்வாக்கு பெரிதும் பொறுப்பானதாகும். அண்டை நாடுகளில் ஒரு யுத்தம் மூளுமானல் அது எமது சுதந்திரத்தைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் எம்மை அடியோடு அழித்துவிடவும் முடியும். மூன்று அல்லது நான்கு நூற்றாண்டு கால குடியேற்ற நாட்டு ஆதிக்கத்துக்குப் பின் புதிதாக சுதந்திரமடைந்துள்ளவைகளும் கொழும்பில் கூடியவைகளுமான ஆசிய-ஆபிரிக்க நாடுகள், இந்தியாவும் சீனவும் தங்களுக்குள் ஏற்பட்டுள்ள தகராறைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளுதற்கான வழிவகைகளைக் காணவேண்டுமென்பதில் உறுதிகொண்டன. எனவே எமது முயற்சிகளின் பயனக, சமீபகாலத்தில் அதிகம் பரிகசிக்கப்பட்டுவந்துள்ள நடுநிலைமைக்கொள்கை, சரியானதென நிரூபிக்கப்படுமென்பதில் இப்பொழுது எனக்கு பூரண நம்பிக்கையுண்டு. காலஞ்சென்ற எமது பிரதமர் உறுதியாகக் கடைப்பிடித்து நடுநிலைமைக்கொள்கை வெறும் ஆக்கமற்ற, கையாலாகாத போக்கு அல்லவென்பதை உலகுக்கு நாம் நிரூபித்துக் காட்டியிருப்போமென்பதிலும் எனக்கு நம்பிக்கையுண்டு. அவர்கள் கூறுவதைப்போலல்லாமல் மிகுந்த ஆக்க சக்தியுள்ளதும் விறுவிறுப்பானதுமாகும் அது. மேலும் இணக்சப் பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் சமாதான வழிகளாலும் சர்வதேசத் தகராறுகளைத் தீர்த்து சமாதானத்தையடைய முடியுமென்றும் நடுநிலைமையானது எமது சொந்த நாடுகளின் நலன்களுக்கு மட்டுமல்லாது மனித வர்க்கத்துக்கும் அத்தியாவசியமென்றும் இதிலிருந்து அறியக்கிடக்கின்றது.

### பொருளாதார சுதந்திரம் அவசியம்

இந்நாட்டு மக்களுக்கு அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டதால் மட்டும் எவ்வித பயனும் ஏற்பட்டுவிடாது. உண்மையில் பொருளாதார சுதந்திரத்தையும் நாம் அடையாவிட்டால் இச்சுதந்திரத்தையும் நாம் இழக்கவேண்டி நேரிடும். நமது சொந்த நாட்டையும் அதன் வளங்களையும் அபிவிருத்தி செய்வதின் மூலமே பொருளாதார சுதந்திரத்தையடையமுடியும். அநேக நாடுகள் நமக்கு உதவியளித்திருக்கின்றன. அவைகளுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்றோம். குறிப்பாக, நமது நாட்டு மக்களின் திறமைக்குப் பொருந்தும்வகையில் நடக்குப் புதியதோர் சமுதாயத்தை உருவாக்கிக்கொள்ளும் பட்சத்தில் வெளிநாட்டு உதவிகளைமட்டும் நம்பியிருத்தலால் நமது பிரச்னைகள் தீர்ந்துவிடாது. எதிர்கால நன்மைக்காக இப்போது சகல துறைகளிலும் கடுமையாக உழைப்பதும் தியாகங்களைச் செய்வதற்கு ஆயத்தமாக இருப்பதும் நமது குறிக்கோளான இந்நாட்டில் வாழும் சாதாரண மக்களின் மகிழ்ச்சியையும் மனநிறைவையும் எய்துவதற்கு ஏதுவளிக்கும். தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகள் பலவுண்டு நமக்கு என்பதில் ஐயமில்லை. இவற்றில் சில கட்சி அரசியல் நிலையிலிருந்து கருதப்படாமல் தேசியரீதியில் கருதப்பட வேண்டியவை. இந்நாட்டின் தேசாபிமானமுள்ள அரசியல் தலைவர்கள், தாங்கள் எக்கட்சியைச் சேர்ந்திருந்தாலும் தேசியநலனை முன்னிட்டு இவ்வாறன தேசியப் பிரச்னைகளை இராஜதந்திர முறையில் தீர்ப்பதற்கான உதவிகளை நல்குவார்களென்பதில் உறுதியுண்டெனக்கு. நான்முன்கூறியதைப்போல, ஒவ்வொரு சுதந்திர ஆண்டு நிறைவுவிழாவும் சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கிக்கொள்ளுவதில் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் குறிக்கின்றது. குடியேற்ற நாட்டு ஆதிக்கத்திலிருந்து அண்மையிலேயே விடுதலையடைந்துள்ளதும் தனது மக்களுக்கு வளமான வாழ்வையளிப்பதற்குச் சகல துறைகளிலும் போராடி வருவதுமான நமது நாடு இன்னல்கள் நிறைந்த பல ஆண்டுகளைக் கழிக்கவேண்டியிருக்கிறது. தாய்நாட்டுக்காக உழைப்பு, தியாகம் தன்னலமற்ற சேவை ஆகியவற்றை நல்க வேண்டிய ஆண்டுகளே, அவை. ஆகவே, பொதுநலனைமுன்னிட்டு நமது சொந்த நலன்களைத் தியாகஞ் செய்வதற்கும் இந்நாடும் இந்நாட்டு மக்களும் சுபிட்சமாகவும் மனநிறைவோடும் வளமான வாழ்வு வாழ்வதற்கும் நம்மாலான முயற்சிகள் அனைத்தையும் செய்வதற்கும் எதிர்வரும் ஆண்டுகளில் நாம் சித்தமாய் இருப்போமாக.

---

## ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

மகிழ்ச்சியாக இருந்தது. பலே பேஷ்!

* * *

நம் கலைஞர்கள் நமது அரிய பெரிய செல்வமாவர். அவர்கள்மூலம் சமூகம் எவ்வளவோ இன்பமும் பயனுமடைய முடியும். ஆகவே அவர்களை ஆதரிப்பது சமூகத்தின் பெருங்கடமை. வேறொன்றும் செய்யாவிடினும் அவர்களது இன்னிசையைக் கேட்டு, பாராட்டி உற்சாகமூட்டலாம்.

விழா நடந்த நல்லூர் தீர்த்தமண்டபத்தில் கச்சேரிகள் 'மேளம்' கட்டி மிகச்சிறப்பாக இருந்தது. இரவு 12-30 மணிவரை பலகச்சேரிகள் நடந்து, பின்னர் பட ஊர்வலமும், முறைப்படி தீபபஜனை, ஆஞ்சனேய உற்சவமெல்லாம் நடந்ததாக அறிந்தேன். நம்மை இன்புறுத்தி, வயிற்றுக்கும்கூட உணவளித்தது, நம்கலைஞர்கள் செய்யும் மேலான சேவையாகும். அவர்களுக்கெல்லாம்பொதுமக்கள் சார்பாக நன்றி தெரிவிக்கிறேன்.

---

## ரூ. 37½ கோடி

புதுடில்லி, பெப். 3

தேசிய பாதுகாப்பு நிதியின் மத்திய கணக்கில் இதுவரை 37 கோடி 72 லட்சம் ரூபாய் சேர்ந்துள்ளதென்றும் இதுவரை 1,380 கிலோகிராம் தங்கமும், தங்க நகைகளும் சேர்ந்துள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## இலங்கைபெற்ற சுதந்திரத்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாமலோ இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் இனம் உட்பட அத்தனை சிறுபான்மை வகுப்புகளும் இன்னும் சிலகாலத்தில் அவற்றிற்குரிய கலாசாரத்தையும் பொருளாதார உரித்தையும் உடமைகளையும் பறிகொடுத்து நிற்கக்கூடியதொரு நாசவழியில் அவர்களை இழுத்துச் செல்கிறது. இந்தவலிமை இவர்களுக்கு நேற்றுவந்தது. பெரும்பான்மை வாக்கு பலம் இவர்கள் கண்ணைக் கட்டி ஆட்சிப் பதவியில் ஏற்றிவைத்துவிட, இவ்வாறு எதேச்சாதிகார வழியில் போய்க்கொண்டிருக்கிருர்கள். சிறுபான்மை இனம் அத்தனையும் இதன் பேரில் நிதானமிழந்து ஆத்திரமோ வெறுப்போ அடையாமல் தங்களைத் தாங்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அந்த ஒரே நோக்கத்துடன் அவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் வருங்காலத்தைப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் புதிய பௌத்த சிங்கள ஆதிக்கத்தை கடைசி மூச்சுள்ளவரை எதிர்த்து நிற்பதைத்தவிர, அவர்களுக்கு வேறு மார்க்கமில்லை. இந்நாட்டின்விசுவாசமுள்ள பிரஜைகளாக இலங்கையின்பால் அபிமானம்கொண்டமக்களாக நாம் இங்கு வாழ்ந்துவருகிறோமென்றல் அது நாம் சிங்களவராகவோ தமிழராகவோ முஸ்லிம்களாகவோ பறங்கியராகவோ இருப்பதனல் அல்ல இலங்கை நம் அனைவருக்கும் ஒரே தாய்நாடாக இருப்பதுதான் அதற்குக்காரணம். நாம் அனைவரும் இலங்கை மாதாவின் புதல்வர்களாக இங்கு வாழ்வதினல்தான் நமக்குத் தேசபக்தியும் இங்குதான் நாம் வாழ்ந்து மடியவேண்டும் என்ற உரிமைப்பற்றுதலும் இருந்து வருகிறது. நமது போராட்டம் தியாகம் வாழ்வு அனைத்துமே இந்த அடிப்படையில் எழுந்தனவாம். இவ்வாறாக நாம் பிறப்புரிமை கொண்டாடும் நாட்டில் பிரஜா உரிமைச் சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த மகத்தான சட்டத்தில் தேசபக்தி நாட்டுப்பற்று என்ற சங்கதிக்கே இடம் தரப்படவில்லையென்றல் அதையிட்டு நாம் சிரிப்பதா அல்லது அழுவதா? சிரிப்பதும் அழுவதும் ஒருபக்கமிருக்க, நாட்டுப் பற்றையும் நல்லுணர்ச்சிகளையுமே அடிப்படையாக வைத்து தாராள மனப்பான்மை காட்டி ஒரு நாட்டின் பிரஜாவுரிமையை நிர்ணயிக்கும் சர்வதேச சட்ட நீதிக்கு இவர்கள் என்ன சொல்வார்களோ?

இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் கேட்டுகொள்ளும்பிரகாரம்ஒருவர் இலங்கைப் பிரஜாவுரிமையை அத்தாட்சிப்படுத்தத் தலைப்பட்டால் இந்நாட்டில் வசிப்போரில் பெருமபகுதியினரும் இலங்கைப் பிரஜாதத்துவத்தை இழந்துபோய்விடுவார்கள். அப்படிப்பார்த்தால் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவந்தவர்களின் தேசப்பற்றும் அவர்களின் பிரஜாவுரிமையும் கூடத்தான் சந்தேகத்துககு இடமாகிவிடுகிறது! அந்த லட்சணத்தில் அத்தனை கெடுபிடிகளோடுதான் பிரஜாவுரிமைச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

அன்பு, விசுவாசம், கூடிவாழ்ந்த பாந்தவ்யம், ஆசாபாசம், காருண்யம் என்று பல காரணம் நிமித்தமாகப் பிறர் பிள்ளைகளைத் தத்து எடுத்துக்கொள்ளும் வழக்கம் மனிதரிடையே சர்வ நாட்டிலும் இருந்துவருகிறது. நாற்றுப் பயிரைப் பிடுங்கி பிறிதோரிடத்தில் வைக்கும் வழக்கத்தைக் கிராம விவசாயிகளிடத்தே பார்க்கிறோம். ஒரு தேசத்தின் பிரஜாவுரிமை பற்றியவரையிலும் இந்தவகையான மனிதஉணர்ச்சிகளுக்கும் இயற்கை நியதிகளுக்கும் இடம்தரப்பட்டிருக்கிறது. உலக நாடுகள் பலவற்றில் அதைக் காணலாம். ஒருவன் நீண்டகாலமாக ஒரு நாட்டில் வாழ்ந்து அங்குதானே தன் கால்களை நிலையாக ஊன்றிவிட்டபோது அவன் விரும்பினல் அந்நாட்டுப் பிரஜையாக முடியும். ஐந்து, ஏழு, பத்து ஆண்டுகள் ஒரு நாட்டில் இவ்வாறு தொடர்பாக வாழ்ந்துவந்தவன் அந்நாட்டு அரசாங்கத்துக்கு மனுச்செய்துகொள்வதன் பேரில் பிரஜாதத்துவம் பெறமுடியும் என்றிருக்கிறது ஆனல் இலங்கையில் பிரசாவுரிமைச் சட்டத்தில் இந்த தாராள மனப்பான்மை மருந்துக்கும் கிடையாது. அதாவது மனுநீதிக்கு அதில் இடமில்லை.

அடுத்தபடியாக தமிழ்ப் பேசும் இனத்துக்குச் சாவுமணி அடிக்கும் நடவடிக்கை இலங்கை அரசாங்கத்தின் குடியேற்றச் சட்டமாகும். முற்றிலும் தமிழ்பேசும் மக்களே வாழும் பிரதேசங்களில் சிங்களவர் பெருந்தொகையினராக குடியேற்றப்பட்டு வருகிறார்கள். அதற்கு அவர்களுக்கு அரசாங்க மான்யம் தரப்படுகிறது. குடியிருப்பதற்கு வீட்டுவசதி கமம்செய்வதற்கு காணி நிலம் நீர்ப்பாசனவசதி கால்நடை எல்லாம் இலவசமாகக் கிடைக்கிறது. ஒண்ட வந்த பிடாரி நாளாவட்டத்தில் ஊர்மத்தியில் கொலு இருந்ததைப்போல இவர்கள் அரசாங்கத்தின் பாரபட்சமான உதவியைப்பெற்று குடியேறும் இடங்களைச் சுவீகரித்துக்கொள்ளுகிறார்கள். அங்கிருந்த பூர்வ குடிமக்கள்நிலை குன்றிப்போகிறது. சிங்களக் குடியேற்றத்தின் கைஓங்குகிறது. காலப்போக்கில் அந்தப்பகுதியின் பார்லிமெண்ட் பிரதிநிதித்துவம்கூட தலைகீழ்ப்பாடமாகிவிடும். ஒரு நாட்டின் தேசிய இனங்களை இம்மாதிரித்திட்டமிட்டு கருவறுப்பதை உலக ஐக்கியநாடுகள் சபையும் கண்டித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப்பேசும் இனத்துக்கு விடிந்திருக்கும் மூன்றுவது அழிவுப்பாதை தனிச் சிங்களச் சட்டமாகும். இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பாக இலங்கையின் இருமொழிகளான சிங்களத்துக்கும் தமிழுக்கும் என்றைக்கும் போல சரிசமமான அந்தஸ்து தரப்படும் என்றே சிங்களத் தலைவர்மாரும் அரசியல்கட்சிகளும் பிரதிநிதிகள் சபைக்குள்ளேயும் வெளியே பொதுமக்கள் மத்தியில்நின்றும் திரும்பத் திரும்ப சொல்லி வாக்குறுதியும் உத்தரவாதமும் அளித்தார்கள். ஆனல் இன்றோ சிங்களமொழி நமது வாய்க்குள்ளே திணிக்கப்பட்டுவருகிறது. தமிழ்மக்களுக்கு சிங்களத்தில் கடிதங்கள் எழுதப்படுகின்றன. தமிழில் கடிதம் எழுதினல் அதற்குப்பதில் சிங்களத்தில் வருகிறது. தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தை ஒழித்துக்கட்டுவதெனத் துணிந்துவிட்ட ஆட்சிபீடம் இதுபோல நமக்குப் பாதகமான இன்னும்பல அநீதிகளை செய்துகொண்டே வருகிறது. அரசாங்க பொதுசேவையில் தமிழர் வகித்த ஸ்தானங்கள் படிப்படியாக அபகரிக்கப்பட்டு வருகிறது.

இத்தகை அட்டூழியங்கள் மத்தியிலும் அநீதிகள் நடுவேயும் தமிழ்ப்பேசும் இனத்துக்கு சுதந்திரதினம் ஏது, சுதந்திரக் கொண்டாட்டங்கள்தான் எதற்கு?

# "வாலிபர்கள் செயலில் இறங்கவேண்டும்; பேச்சுக்கள்மட்டும் போதாது"

## வாலிப முன்னணி அரசியல் மகாநாட்டில் தலைவர் உரை

## 'வாலிபர் ஒன்றுசேர்ந்தால் உரிமை கிடைத்துவிடும்'

—திரு. அமிர்தலிங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"மேடைபபேச்சுகளுடன் நின்றுவிடாமல் செயல் துறைகளில் ஈடுபடவேண்டும். இதனை இன்றைய வாலிபர்கள் கருத்தில் கொள்ளவேண்டும். போராட்டம்தான் விடுதலைபெற உகந்த வழியாகும். வாலிபர்கள் நடாத்தும் போராட்டங்கள் திறன் மிக்கவையாகவும்.வலிமையுள்ளனவாகவும் இருக்கும்" என்று வவனியாப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் நேற்று மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி வாலிப முன்னணியின் அரசியல் மகாநாட்டிற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:—

அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைப் பயன்படுத்திச் சிலர் ஓய்வு பெற முயலுகின்றனர். சிங்களம் படிப்பதனுல் உத்தியோகம் பெறலாம் என்ற எண்ணத்தை அகற்றிவிட வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவரும் நாளில் எமக்கும் உத்தியோகம் கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லை.

ஆகலால் கமத் தொழிலில் அனைவரும் ஈடுபடவேண்டும். குடியேற்றத் திட்டங்களில் மக்கள் பங்கு கொள்ளவேண்டும். விவசாயத்துறையில் ஈடுபட்டோர் அரசாங்க ஊழியர் பெறும் சம்பளத்தைவிட அதிகமாகப் பெறலாம்.

கடந்த காலத்தில் நமது நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் பயன் தந்தன என்பதனை அறிவோம். இந்த அடிப்படையிலே எதிர்கால நடவடிக்கைகள் அமையும். செயலில் இறங்கிப் போராடுவதே வாலிபர்களின் கடமையாகும். வாலிபர் உள்ளங்களிலேதான் எதிர்காலத் திட்டங்கள் உருவாகின்றன. வாலிபரின் போராட்டம் திறன் மிகுந்தது. கொள்கை மாற்றமில்லாவிடின அரசாங்கம் எம்மையே ஒதுக்கிவிடும்.

### சமஷ்டி என்பது கூட்டாட்சி

திரு. வெ. நடராசா பேசுகையில் கூறியதாவது:-

"சமஷ்டி எனின் அது கூட்டாட்சியாகும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள வாழும் நாட்டில் கூட்டாட்சி வேண்டும். சிறுபான்மை மக்களின் பண்புகள் பாதுகாக்கப்படவேண்டுமானுல் கூட்டாட்சி அவசியம். பின் தங்கிய நாடுகளில் நிச்சயமாக சமஷ்டியாட்சி இருந்தே ஆகவேண்டும்."

ஜனாப் மசூர் மௌலானு பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழரசுக் கட்சி அரசியல் கட்சிமட்டுமல்ல, விடுதலை இயக்கமுமாகும். நசுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலையளிக்கவே முயற்சிக்கின்ருேம். வாலிபர்களாகிய நாம் எதனையும் செய்ய வேண்டும். நமது சமூகம் விடுதலை பெற வாலிபர்கள் பாடுபடவேண்டும். எதிர்காலத்தைச் சுபிட்சமான தாக்க வாலிபர்களே உழைக்கவேண்டும்.

எமது பொறுப்புகளை உணர வேண்டும். சலுகைகள் பெற்று வாழ்வது தற்காலிகமானது. முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையில் சில சலுகைகளை அரசாங்கம் செய்துவருகின்றது.

இந்த நாட்டில் முஸ்லிம்கள் அரசியல் அனுதைகள். முஸ்லிம்கள் உலகில் பரந்து வாழ்கிருர்கள். இலங்கையில் முஸ்லிம் மக்கள் மூன்ருந்தரப் பிரஜைகளாக வாழக்கூடாது. முஸ்லிம் மக்களை அடக்கி ஆளநினைப்பது வெறும் கனவாகிவிடும் முஸ்லிம் மக்கள் சரிநிகர் சமானமாக தலைநிமிர்ந்து வாழவேண்டும். எமது மத்தியில் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற இனமே இல்லை. தமிழர்களில் சிங்களம் படிப்பவர்கள் யாராகிலும் அவர்கள் தாழ்ந்தவர்களாகக் கருதப்படவேண்டும்."

### துணிவுதான் விடுதலைக்கு வழி

பருத்தித்துறை எம். பி. க. துரைரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

வாழ்க்கையில் சலனம் ஏற்படுவது இயல்பு. இலட்சியத்திலீடுபட்டவர்கள் உடனடியாக வெற்றியைப் பெற முடியாது. பல தியாகங்களும் போராட்டங்களும் செய்வதன் மூலமே வெற்றி எய்த முடியும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும். துணிவுதான் இன விடுதலைக்கு அடிகோலுவதாகும். சலிப்பு இலலாத உழைப்பு வேண்டும். துன்பம் வருகிறபோது உடனடியாக இன்பமும் வருவதில்லை.

இனிமேல் உத்தியோகம் என்ற பேச்சுக்சே இடமில்லை. பொருளாதாரத்தைஅபிவிருத்தி செய்யவேண்டும். இப்பகுதியிலிருந்து வன்னி நாட்டிலும், மட்டுநகரிலும் குடியேறுபவர்கள் அங்கு மக்களைச் சுரண்டக்கூடாது. குடியேற்றத் திட்டங்களில் இளைஞர்கள் குடியேறவேண்டும். கஷ்டம் எங்கும் உண்டு."

திரு. தாமோதரம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

இலங்கை சுதந்திரமடைந்து 14 ஆண்டுகளாயின. இன்று சிங்களவர் வலிமைபெற ஆரம்பித்துள்ளார்கள். தமிழ் பேசும் மக்களை ஒருபோதும் சிதைக்க முடியாது.

இஸ்ரவேல் மக்களின் சரித்திரத்தை எடுத்துப் பார்த்து அவர்களின் வழிகாட்டும் தன்மையை நாமும் பின்பற்ற முடியும். ஆண்களும் பெண்களும் முன்னின்று உழைத்தால்தான் சுதந்திரத்தைப் பெற முடியும்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

### இரத்தம் சிந்தவில்லை

சுதந்திர இலங்கையில் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டு நாம் வாழுகின்ருேம். பல இன்னல்களுக்கு உள்ளாகிருேம். போராட்டங்கள் எப்போதும் வெற்றியையே தந்து தீரும். சுதந்திரத்திற்காகப் போராடும் எந்த சமூகமும், இனமும் தன்னை அடிமைப்படுத்திய இனத்தை அழித்துவிட விரும்பாது. தனது உரிமையைப் பெறவே முயலும். நாம் அடிமைகளல்ல என்று உறுதிபூண்டால் அது விடுதலைக்கு அடிகோலுவதாகும். இலங்கையின் சுதந்திரத்திற்காக எவரும் இரத்தம் சிந்தியது கிடையாது. உலகில் சுதந்திரம்பெற்ற நாடுகள் மக்களை தோல்வியுற்ற பாதையிற் செல்லவிடாது. அரசாங்கத்தின் அடக்கியாளும் கொள்கை நமது சுதந்திரப் போராட்டத்தை உயர்த்தியே செல்லும். சுதந்திர உணர்ச்சியை அடக்குமுறைகளினுல் அடக்கிவிடமுடியாது. அரசாங்கம் மிருகத்தனமாக எம்மை நடத்துகிறது. ஆனுல் இது நிலையானதல்ல.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் மலைநாட்டிலும் வாழும் தமிழ் மக்கள் பிரதிநிகள் எம்மைத்தவிர வேறுயாருமில்லை, அகிம்சைப் போராட்டத்தின் மூலம் நாம் நமது உரிமைகளைப்பெற்றேதீரவேண்டும். இந்நாட்டில் உள்ள பிரச்னைகளைத் தீர்க்க முடியாத அரசாங்கப் பிரதமர் உலகப் பிரச்னைகளைத் தீர்க்கமுயலுவது விந்தையானது.

இலங்கையில் தமிழ்ப்பேசும் மக்களாக 30 லட்சம் பேர் வாழ்கிருர்கள். இலங்கை ஜனத்தொகையில் மூன்றிலொரு பங்கினரான எமக்கு உரிய உரிமைகள் வழங்கப்படவில்லை.

மக்களின் உறுதியே வெற்றியின் அடிப்படை. ஒருசிலரைக்கொண்டு இனத்தைக் குறைகூற முடியாது. மக்களுக்குச் சரியான வழியைக் காட்டித் தீருவோம். எமது உரிமைகளைப்பெறப் போராட்டத்தில் குதித்தேதீருவோம். எம்மை எந்தச் சக்தியாலும் அடிபணியவைக்க முடியாது. வாலிபர் சமுதாயம் ஒன்றுபட்டால் உரிமைகளைப்பெறுவது சாத்தியமாகும்.

மற்றும்பலர் பேசினர். கலை நிகழ்சிகளும் நடைபெற்றன.

# "ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கவேண்டும்"

## அரசியல் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்படவேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானமொன்றினை தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி 9-வது தேசிய மகாநாட்டில் நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை வவனியா பட்டினசபைத் தலைவர் திரு. ச. சுப்பிரமணியம் தலைமையில் நிகழ்ந்த அரசியல் மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழரசுக்கட்சியின் மன்னர் மகாநாட்டுத் தீர்மானப்படி எதிர்வரும் எல்லாப் போராட்டங்களிலும் வாலிப முன்னணி தீவிரமாகப் பங்குகொள்ள வேண்டும்.

உரிமை இழந்து தவிக்கும் தமிழ்ப்பகுதிகளுக்கு "தனிச் சிங்களச் சட்டத்தை ஆதரிக்கும் எந்த மந்திரியையாவது அழைக்கக்கூடாது என்றும் எங்களுடைய வேண்டுகோளைப் புறக்கணித்து அழைத்தால் கறுப்புக்கொடிகாட்டி எதிர்ப்புக் காட்டுவதற்கு எங்களுடன் ஒத்துழைக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டுக்கொள்கிருேம்" என்றுகூறும் தீர்மானமும் கடந்த சத்தியாக்கிரகத்தில் இராணுவத்தினரின் அட்டூழியத்திறகு ஆளாகி வருந்திய தமிழ்ப்பேசும் மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளும் தீர்மானமும் தமிழ்உரிமைப் போராட்டத்திற்கு ஆக்கம் அளிக்கும் வகையில் தமிழ்ப் பேசும் மக்கள்யாவரும் அரசாங்கத்துடனும் பொதுநிலையங்களுடனும் தமிழிலேயே தொடர்புகொள்ளுமாறு வேண்டிக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

அரசாங்க ஊழியர்கள் தம் சம்பள உயர்வுக்காகச் சிங்களம் படிப்பது தமிழ் உரிமைப் போராட்டத்தைப் பாதிப்பதுடன் தமிழ் இனத்தவருக்கு வெட்கத்தையும் வேதனையையும் தருவதாகும். எனவே சிங்களம் படிப்பதனை உடனடியாக நிறுத்தும்படி தமிழ் மக்கள் சாாபில் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிருேம்.

### ஆசிரியர் எதிர்க்கவேண்டும்

தமிழாசிரியரின் சம்பள உயர்ச்சியை நிறுத்தியதும் அவர்கள் அரசாங்கத்துடன் சிங்கள மொழியில் தொடர்புகொள்ள வேண்டுமென்றும் அரசாங்கம் முடிவுசெய்திருப்பது தமிழ் இனத்திற்கு எவ்வித உரிமைகளையும் அளிக்காது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். இந்த முடிவுகளை ஆசிரியர்கள் கடைசிமூச்சு உள்ளளவரை எதிர்க்கவேண்டும்.

தமிழரசுக் கட்சி எம்.பி.க்கள் பொதுமக்களுடன் நேரடித் தொடர்புகொண்டு அவர்களது ஆதரவைப்பெற வேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் நடக்கும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தைக் கண்டிப்பதுடன் அப்பகுதிகளில் தமிழ்மக்களைக் குடியேற்றும்படி அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.

வேறும்பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# இளைஞர்களுக்கு ரிமாண்ட்

கொழும்பு, ஞாயிறு

களுத்துறை மேற்கு புகைபிரத நிலைய ரெயில் பாதையில் உள்ள இடைவெளிகளில் கற்கள் வைத்ததாக மூன்று இளைஞர் மேல் குற்றஞ்சாட்டப்பட்டு சென்ற வெள்ளிக்கிழமை களுத்துறை மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். வை. எம். அமரசிங்கா, கருணசேன, ஜி. குணதாசா என்ற இவ்விளைஞர்கள் பனிப்பிட்டியாவிலுள்ள இளைஞர் விடுதிக்கு ரிமாண்டில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டுள்ளார்கள்.

# ஆடிட்டர் ஜெனரல் ஓய்வு பெறுகிருர்

கொழும்பு, ஞாயிறு

திரு. எல். ஏ. வீரசிங்கா ஆடிட்டர் ஜெனரல் பதவியிலிருந்து ஓய்வு பெறவிருக்கிருர். இவர் ஓய்வுபெறுவதற்கு முன் மார்ச் முதலாம் திகதியில் லீவில் செல்லவிருக்கிருர்.

ஆடிட்டர் ஜெனரல் திரு. வீரசிங்கா தாம் தமது பதவியிலிருந்து மே 27-ந் திகதி ஓய்வுபெறப்போவதாக கவர்னர் ஜெனரலுக்கு அறிவித்துள்ளார். சார்ட்டற் அக்கவுண்டனை திரு. வீரசிங்கா 1953-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆடிட்டர் ஜெனரலாகப் பதவியேற்ருர்.

# யாழ்தேவி தாமதம்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்பிலிருந்து சனிக்கிழமை பிற்பகல் புறப்பட்ட யாழ்தேவி ஒருமணிநேரம் தாமதித்தே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. கொழும்பிலிருந்து யாழ்தேவியில் பிரயாணம் செய்தவர்களின் தொகை அதிகரித்திருந்ததும், புகையிரதநிலையங்களில் ஏறி இறங்கிய பிரயாணிகள் அதிகமாகக் காணப்பட்டதுமே யாழ்தேவியின் தாமதத்திற்குக் காரணமாகும்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலயத்தில் மட்டும் சுமார் 300 பிரயாணிகள் இறங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முஸ்லிம் முன்னேற்றத்தை தடுக்கிருர்

## கல்வி மந்திரி மீது கண்டனம்

திருக்கோணமலை, சனி

'தற்போதைய அரசாங்கத்தில் கல்வி அமைச்சராகப் பதவி வகிக்கும் ஒரு முஸ்லிம் அமைச்சர் எமது முஸ்லிம் சமூகத்தின் கல்வி சம்பந்தமான முன்னேற்றக் கொள்கைகளை நசுக்குகிருர். இதனுல் எமக்கு முன்னைய அரசாங்கங்களால் வழங்கப்பட்ட சலுகைகள், உரிமைகள் ஆகியன பறிபோகின்றன' எனத் தெரிவிக்கும் தீர்மானமொன்று கிண்ணியாவைச் சேர்ந்த முனியசேனைச் சேனை இஸ்லாமிய ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

ஒரு சமூகத்தின் தரத்தினை உயர்த்தவேண்டிய ஒரு முஸ்லிம் பிரமுகர் இவ்விதம் செய்வதனுல் முஸ்லிம்களின் சுதந்திரம் பறிபோய்விடும். முஸ்லிம்கள் நசுக்கப்படுவார்கள். இதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மாமூத் அவர்களின் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கின்ருேம்.

# '21 வட்டாரங்களாக பிரிக்கப்படவேண்டும்'

## யாழ். மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**யாழ்ப்பாணம் மாநகரசபை வட்டாரங்களை 21 வட்டாரங்களாகப் பிரிக்கவேண்டுமென யாழ்ப்பாணம் மேயர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கத்தின் தலைமையில் நேற்று நடைபெற்ற மாநகர சபையின் விசேஷ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.**

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

'உள்ளூராட்சி ஆணையாளர் யாழ்ப்பாணம் மாநகரசபை வட்டாரப்பிரிவினை சம்பந்தமாக விடுத்த அறிக்கை சபையின் தீர்மானத்துக்கு அமையவில்லை என்றும் மாநகரசபை வட்டாரங்களை 21 வட்டாரங்களாகப் பிரிக்கவேண்டுமென்றும் கரையோரப்பகுதிகளான நாவாந்துறை,குருநகர், பாஷையூர் ஆகிய இடங்களுக்கும் சிறுபான்மைத் தமிழருக்கும் முஸ்லிம் மக்களுக்கும் அதிக பிரதிநிதித்துவம் சபையில் கிடைக்கக்கூடியதாகவும் ஏனைய வட்டாரங்களில் வாக்காளர் தொகை சராசரி 2000 இருக்கவேண்டுமென்றும் பின் தங்கியவர்கள் பிரதிநிதித்துவம் பெறும் வட்டாரங்களில் வாக்காளர் தொகை இரண்டாயிரத்துக்குக் குறைவாக இருக்கலாமென்றும் இச்சபை ஏகமனதாகத் தீர்மானிக்கிறது'.

சிறுபான்மைத் தமிழருக்குப் பிரதிநித்துவம் அளிக்கவேண்டிய அவசியம் பற்றி திரு. என். டி. செல்லத்துரையும் கரையோரப்பகுதிமக்களுக்குப்பிரதிநிதித்துவம் கிடைக்கவேண்டிய அவசியம் பற்றி திரு. எம். ஜோனும் முஸ்லிம் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டியதுபற்றி திரு. என். தேவபாலசுந்தரமும் எடுத்துக் கூறினர்.

பரந்தன் தொழிற்சாலைபற்றி பரபரப்பான தகவல்

# ரூ. 15 லட்சம் பெறுமதி யந்திரங்கள் பாழ்

## பூட்டிய யந்திரமும் இயங்கவில்லை! பூரணவிசாரணை நடத்தகோரிக்கை

( பொ. பாலசுந்தரம் )

கொழும்பு, ஞாயிறு
வட இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள பிரதான தொழிற்சாலைகளில் ஒன்றான பரந்தன் ரசாயன தொழிற்சாலைக்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெருந்தொகையான இயந்திரங்கள் துருப்பிடித்துக்கொண்டிருப்பதாக அரசாங்கத்துக்கு அநேக முக்கியஸ்தர்கள் புகார் செய்திருக்கிறார்கள்.

உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தொழிற்சாலையே மூடப்பட்டுவிடலாம் என்று அஞ்சப்படுகிறது.

சுமார் 8 வருடங்களுக்கு முன்னர் இத்தொழிற்சாலைக்கென இறக்குமதி செய்யப்பட்ட ரூபாய் 15 லட்சம் பெறுமதியான யந்திர சாதனங்கள் இன்றுவரையில் வெளிநாடுகளிலிருந்து வந்து சேர்ந்த நிலையிலேயே இருக்கின்றன-அதாவது பெட்டிகளுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன, என்னென்ன இயந்திரசாதனங்கள் பெட்டிக்குள் இருக்கின்றனவென்று கூட தெரியாமலிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

தொழிற்சாலையின் ஒரு புறத்தில் இன்னுமொரு யந்திரசாதனம் இயங்காமலிருக்கிறது இந்த யந்திரத்தின் பெறுமதி ரூபாய் 8 லட்சம் என்று தெரிய வருகிறது. இப்படி இயங்காமலிருப்பதனால் இந்த இயந்திரத்துக்குள் சில உறுப்புக்கள் துருப்பிடித்துள்ளதாகவும் மேலிடத்துக்கு புகார் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படி யந்திர சாதனங்கள் துருப்பிடித்து தேடுவாரற்றுக் கிடக்கையில் தொழிற்சாலை பயன்தரவில்லையெனவும், மூடுவிழா நடத்தவேண்டுமெனவும் ஒருஇரகசியஅறிக்கை ஏற்கனவே அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையை ஆதாரமாகக்கொண்டு விசாரணை நடத்திய ஒரு குழு "தொழிற்சாலையைத் தொடர்ந்து முறையாக நடத்துவதன் மூலம் பயனடையலாமென" தெரிவித்தது. இதைத் தொடர்ந்து தொழிற்சாலை மூடப்படவில்லை.

தேடுவாரற்றுப் பெட்டிகளில் இருக்கும் யந்திரசாதனங்களை உரிய முறையில் உபயோகிக்க வேண்டுமெனவும், மூடுவதென்ற நோக்கத்தை அரசாங்கம் கைவிட்டுவிடவேண்டுமென்றும் இத்தொழிற்சாலையின் தொழிலாளர்கள் அரசாங்கத்தையும், கைத்தொழில் மந்திரியையும் கேட்டிருக்கிறார்கள்.

### எம். பி. யிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்
"காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலையின் உபயோகத்திற்கென அரசினரால் எடுக்கப்பட்ட காணிகளின் சொந்தக்காரர்கள் அரசினரால் அகற்றப்பட்டும் இதுவரை அவர்களுக்குப் பணம் வழங்கப்படவில்லை, இதனை வழங்க ஆவன செய்யுமாறு காங்கேசன்துறை எம். பி. திரு. செல்வநாயகத்தை இக்கிளை வேண்டுகிறது" என்னும் தீர்மானம் காங்கேசன்துறை தமிழரசுக் கட்சிக் கிளைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. திரு. ஆ. தெட்சணமூர்த்தி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. மற்றும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### வட்டாரப் பிரிவு பற்றி விசாரணை

யாழ்ப்பாணம், திங்கள்
யாழ்ப்பாணம் மாநகர சபை வட்டாரப் பிரிவினை சம்பந்தமாக நேரடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமுகமாக ஸ்தல ஸ்தாபன இலாகா முதற் காரியதரிசி திரு. எம். டபிள்யு. எஸ். குணரத்தின நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார். இத்தகவலை உள்ளூராட்சிக் கமிஷனர் திரு டபிள்யு. மகதந்திலா யாழ்ப்பாணத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கும் அறிவித்திருக்கிறார். திரு. குணரத்தினவின் வருகையை யாழ்ப்பாணம் மேயர் ஆட்சேபித்திருப்பதாகத் தெரிகிறது. திரு. குணரத்தினவின் குறுகிய கால அறிவித்தலில் வருவதனை மாநகர சபை ஆட்சேபித்து தந்தி அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

### வானொலி நிகழ்ச்சிகள்
**திங்கள் 4-2-63**

#### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-00 மணியோசை, 6-05 இலங்கை மாதாவுக்கு அஞ்சலி—இசை நிகழ்ச்சி, 6-45 பாமாலை, 6-55 சுததோலிக்க நற்சிந்தனை, 7-15 மூவர் இசை, 7-45 வாத்திய இசை, 8-00 பூசையும் பிரார்த்தனையும்-அனுராதபுரததிலிருந்து அஞ்சல், 9-00 நாகஸ்வரம்.

பகல் 12-00 இருபத்தொரு பீரங்கிவேட்டுகளும், கௌரவ பிரதம மந்திரி அவர்களின் சுதந்திரதினச் செய்தியும், 12-20 சுதந்திரதினப் பிரார்த்தனை—அனுராதபுர முஸ்லிம் பள்ளிவாசலிலிருந்து அஞ்சல், 1-00 கதம்ப இசை.

மாலை 3-00 படை அணிவகுப்பு வர்ணனை, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 கௌரவ பிரதம மந்திரி அவர்களின் சுதந்திரதினச் செய்தி, 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 வெளிநாட்டு வாழ்த்துரைகள்.

இரவு 7-00 'வாழ்க சுதந்திரம்'—சுதந்திரதின விசேட விவரணச் சித்திரம், 7-30 வி. கனகசுந்தரம்—வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ்மூலம் சிங்களம், 9-30 சுதந்திரதின நிகழ்ச்சிகள்—தொகுப்புரை, 9-45 பரமேஸ்வரி விஜயரத்தினம்—இரு வீணை.

#### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப் பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 வேப்பத்தூர் ஜகதீசன்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 கும்பகோணம் டி. சரோஜினி—பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 8-00 நமது கடமை-பேச்சு, 8-15 சென்னை அஞ்சல், 8-30 டில்லி அஞ்சல், 8-45 தேச பக்திப் பாடல்கள் 9-15 வெற்றிவாகை: தொடர் சித்திரம், 9-30 கும்பகோணம் டி. சரோஜினி—பாட்டு.

### "வெற்றிகண்ட காந்தி"

மாவிட்டபுரம், ஞாயிறு
"சட்டத்தால் ஒழிக்கமுடியாத தீண்டாமையை அஹிம்சையால் ஒழிக்க முயற்சித்து வெற்றி கண்டவர் காந்தியடிகள். உள்ளத்தால் பொய்யாதொழுகிய காரணத்திற்காக காந்தி உலகத்தவர்களின் உள்ளங்களில் நிலைத்துநிற்கிறார்" என்று காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி மாணவர்மன்ற காந்தி நினைவுதின விழாவிற் பேசிய திரு. ப. சுப்பையா குறிப்பிட்டார். செல்வன் த. தங்கலிங்கம் தலைமையில் நிகழ்ந்த இவ் விழாவில் செல்வர்கள் சோ. சேனாதிராஜா, நா. கருணானந்தசிவம், மு. சண்முகராஜா ஆகியோரும் பேசினர்.

### 14-ந் திகதி தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்
தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் தெரிவு இம்மாதம் 14-ம் திகதி நடைபெற விருக்கின்றது. திரு. கு. கதிரையாண்டி அரசாங்க பாடசாலையில் ஆசிரியராக பணிபுரிவதனால் தமது தலைவர் பதவியை ராஜினாமாச் செய்திருந்தார். இதனாலேயே புதிய தலைவர் தெரிவு நடைபெறவிருக்கிறது. புதிய தலைவர் தெரிவுபற்றிய அறிவித்தலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். வி. மாணிக்கவாசகர் கிராமசபை அங்கத்தவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

### ஆஸ்பத்திரிக்கு எஸ். ஜே. வி. விஜயம்

யாழ்ப்பாணம், திங்கள்
காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சனிக்கிழமை காலை காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு விஜயஞ்செய்து அங்குள்ள நோயாளர்களிடம் கலந்துரையாடினார்.

திரு. எஸ். ஜே. வி. யின் ஆஸ்பத்திரி விஜயம்பற்றி எதுவித காரணமும் கூறப்படவில்லை.




# தமிழரசு வாலிப மகாநாட்டுக்கு மா. பொ. சி., கி. ஆ. பெ. வாழ்த்து

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் 9-வது தேசிய மகாநாட்டுக்கு சென்னை மாநில தமிழரசுக் கழகத் தலைவர் திரு. மா. பொ. சிவஞான கிராமணி, தி மு. க தலைவர்களில் ஒருவரான திரு இரா. நெடுஞ்செழியன் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

'இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டுவரும் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வாலிப முன்னணியின் மகாநாடு எல்லா வகையிலும் சிறப்புற்று விளங்க எனது அன்பின் வாழ்த்து என திரு. மா. பொ. சி. தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தமது செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

"இலங்கைத் தமிழ் அரசு வாலிப முன்னணியின் ஒன்பதாவது மகாநாடு வருகிற மாசித் திங்கள் முதல் வாரத்தில் நடைபெறவிருக்கும் செய்தியறிந்து பெரிதும் மகிழ்ந்தேன். மகாநாடு சிறப்பாக நடைபெற வேண்டும் எனவும் முன்னணியின் உறுப்பினர்கள் கட்டுப்பாடுடனும், ஒழுக்கத்துடனும், நேர்மையுடனும இருந்து நாட்டிற்கும், மொழிக்கும், மக்களுக்கும் நற்றொண்டுசெய்து சிறப்படைய வேண்டும் எனவும் முழு மனதோடு வாழ்த்துகின்றேன்".

இலங்கையைத் தாயகமாகக் கொள்ளவிரும்பும் தமிழர் முன்னேற்றத்துக்காக அரும்பாடுபட்டு பெரும்பணி செய்துவரும் தமிழரசு வாலிப முன்னணியின் சிறந்த உள்ளம் வாழ்க அதன் செல்விய தொண்டு வெல்க'

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருள் ஒருவரான திரு. இரா நெடுஞ்செழியன் தமது வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## ஆசிரியருக்கு கடிதம்

(2-ம் பககத தொடர்ச்சி)

இத்தெருக் குழிகளால் அநேக நஷ்டமுண்டு.

மழை பெய்ததும் இக்குழிகளில் நீர் நிற்கின்றது. மோட்டார் வாகனங்கள் இவற்றைச் சட்டைசெய்யாமல் போகும் போது அருகால் போகும் பாதசாரிகளுக்கு அழுக்கு நீர் 'சளக்' கென்று பாய்ந்தடிக்கின்றது. சில இடங்களில் வாகனங்களினால் இதனைத் தவிர்க்க முடியாமலுமுள்ளனை ஒப்பத்தான் வேண்டும்.

இக்கஷ்டத்தை உணர்ந்தோ என்னவோ பொறுப்பானவர்கள் சிறு கற்கள் போட்டு, தார் போட்டு குழிகளை அடைத்து வருவது உண்மையே. எனினும் நன்மை என்று நினைத்துச் செய்வது தீமையையும் விளைத்துவிடுவதுண்டு. குழிகளில் கற்களையும் போட்டு, தாரையும் போட்டு, அதன்பின் மேலே மண்ணையும் கொட்டுகின்றார்களே, அது பொதுமக்கள் கண்ணில் போடும் மண் தான். வாகனங்கள் 'பூம் பூம்' எனப் போகும் போது அந்த மண்ணையெல்லாம் வாரி நமது கண்ணிலும் மேனியிலும் கொட்டிக் கொண்டு போவது கண்ணுவி. இந்த விநோதம் ஒவ்வொரு ரோட்டிலும் ஒவ்வொரு வருடமும் நடப்பது பலவிதங்களிலும் நொந்துபோயிருக்கும் மக்களுக்கு மேலும் சங்கடம் விளைப்பதாகும். ஆகவே இதற்குப் பொறுப்பானவர்கள் இத்தொல்லை பிரதி வருடங்களிலும் நடவாமல் சிலவருடங்களுக்கொரு தடவையாவது நடக்க (முற்றாகத் தடுக்கமாட்டார்களென்றே நம்புகின்றேன்) ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

யாழ்ப்பாணம் சபா

## இன்றுசுதந்திர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டதோ அன்று தொடக்கம் தமிழ் பேசும் இனம் தமக்கு என்று இருந்த உரிமையையும் இழந்துவிட்டது என்ற காரணத்திற்காகவே இத்தினத்தை தமிழ் இனத்தின் தேசிய துக்க தினமாகக் கருதுகிறோம்" என்று கொடிகாமம் வர்த்தகர்கள் மத்தியில் துக்கதின ஒழுங்குகள் செய்யச் சென்ற சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் குறிப்பிட்டார்.

"ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இந்நாடு அனுபவித்த உரிமைகள் கூட இப்போது எம்மிடமிருந்து பறித்து எடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்த நேரத்தில் தமிழ் மொழிக்கு இருந்த அந்தஸ்துக் கூட இப்போது தமிழ் மொழிக்கு இல்லை. தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் மூலம் கல்வி கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்களும் சிங்களம் படிக்க வேண்டும் என்ற அளவுக்கு அரசாங்கம் கட்டளை விதிப்பின் எவ்வளவு தூரம் நாம் சுதந்திரமாக இருக்கிறோம் என்று அறியக் கூடியதாக இருக்கிறது" என்று அவர் மேலும் கூறினர்.

## "தமிழ்பேசும் மக்களை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திகளில் உள்ள முஸ்லிம்கள் சிறப்பாகக் கிழக்கு மாகாணத்திலே வசிக்கும் முஸ்லிம்கள் பல விதங்களில் தாக்கப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள். பாரம்பரியமாக அவர்கள் வாழ்ந்துவந்த பிரதேசம் தமது சொந்த நாடு என்று கூறக்கூடிய பகுதிகள் எல்லாம் சிங்களக்குடியேற்றத்தினால் முஸ்லிம்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை முஸ்லிம்களாகிய நாம் என்றும் மறக்கமாட்டோம். எனவே தமிழரசுக் கட்சி நடத்தும் எந்தப் போராட்டத்திலும் முஸ்லிம்களாகிய நாம் அயராது சளையாது ஒன்றுபட்டு உழைக்க முன்ர வேண்டும்.

### மலைநாட்டு மக்களின் உரிமை

மலைநாட்டுத் தொழிலாளர் கழகக் காரியதரிசி திரு. பி. எம். கிருஷ்ணசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது: 1947ல் இலங்கை சுதந்திரம்பெற்ற போது இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் தமக்கு ஆபத்து உண்டாவதனை உணர்ந்திருக்க வேண்டும். 1949 வரைக்கும் இதனை எந்தத் தமிழ்த்தலைவர்களும் உணரவில்லை. 1949-ல் நிலைமை மோசமாவதனை உணர்ந்த தமிழரசுக் கட்சி பல கஷ்டங்களுக்கிடையே தமிழ் மக்களின் விழிப்புணர்ச்சியை வளர்த்து உரிமைக்காகப் போராடி வந்திருக்கிறது.

1952-ல் இலங்கைத் தமிழர்கள் வட, கிழக்குப் பகுதியில் உள்ளவர்கள் நமது கட்சியை என்னி நகையாடியபோதும் விடாமுயற்சியினால் 1956-ல் நமது கட்சி பெரும் ஆதரவு பெற்றது.

மலைநாட்டு மக்களின் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க தமிழரசுக் கட்சி ஆயத்தமாகவுள்ளது.

மலைநாட்டுத் தொழிலாளர் கழக உப-தலைவர் திரு. கே. ஏ. இராமன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

மலைநாட்டு மக்களின் இழந்த உரிமைகளைப் பெறப் போராட முன்வந்த தமிழரசுக் கட்சியை மலைநாட்டு மக்கள் ஒத்துழைத்து ஆதரிக்கத் தயாராக இருக்கின்றார்கள். மலைநாட்டு மக்களின் மொழியுரிமை குடியுரிமைகளைப் பெற மலைநாட்டுத் தொழிலாளர் கழகம் அயராது உழைக்கும் என்றே கூறவிரும்புகின்றேன்.

## இளவரசர் சிகானுக் பீக்கிங் செல்வார்

புதுடில்லிபப். 2

கொழும்பில் கூடிய ஆறு நாடுகள் தெரிவித்திருந்த யோசனைகளை, சீனவை ஏற்றுக்கொள்ள வைக்கும் பொருட்டு தாம் பீக்கிங் சென்று சீனப்பிரதமருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்போவதாக புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள கம்போடிய இளவரசர் சிகானுக் இன்று தெரிவித்துள்ளார்.

புனாவிலிருந்து இன்று பங்களூர் போய்ச் சேர்ந்த இளவரசர் நொரடும் சிகானுக்நிருபர்களுக்குஅளித்த பேட்டியில், தனது நாட்டுக்கும், அண்டைய நாடுகளுக்கும் இப்படியான தகராறுகள் உண்டென்றும் புதுடில்லி விஜயத்தை முடித்துக்கொண்டு தாம் பீக்கிங்செல்லப்போவதாகவும் தெரிவித்துள்ளார். யோசனைகளை சீனஏற்றுக் கொள்ளும்வரை, சீன-இந்திய எல்லைத் தகராறுகுறித்துநேரடி பேச்சு வார்த்தைகள்நடைபெற வாய்ப்பு இருக்காது என்று பாரத வெளிவிவகார அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

## 'இரு தேசமக்களுக்குங் குறிக்கோள் ஒன்றே'

### இலங்கையில் ரஷ்ய அதிதி

கொழும்பு, ஞாயிறு

'நாம் சந்தித்த மக்கள் அனைவரும் தாம் சமாதானமாக வாழ விரும்புவதாகவே தெரிவித்தார்கள். எங்கள் நாட்டவர்களையும், இந்நாட்டவர்களையும் 6000 மைல் தூரம் பிரித்தாலும் இரு நாட்டவரின் குறிக்கோளும் சமாதானமாகவே இருக்கிறது. இங்கிருந்த நாட்களில் நாம் இலங்கையிலுள்ள பல்வேறு சமூகத்தினருடனும், சமயத்தவருடனும் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்கள் ரஷ்ய மக்களின் கலாச்சாரத்தில் காட்டும் ஆர்வம் என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.'

இவ்வாறு இலங்கையில் இரண்டு வாரம் சுற்றுப்பிரயாணம் செய்த ரஷ்ய சுப்றீம் கோர்டின் உதவித் தலைவர் திருமதி என். செர்கீவா பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். திருதி செர்கீவாவுடன் சம்கயித் மேயர் திரு. அக்குண்டொவும் இங்கு வந்திருக்கிறார்.

திருமதி செர்கீவ் இங்கு பல வழக்கறிஞர்களையும், நீதிபதிகளையும், சட்டக்கல்லூரி மாணவர்களையும் கண்டு போனர். சட்டத்தைப்பற்றி இவர்கள் மிகக் குறைவான அறிவைப் பெற்றிருப்பது பற்றி தான் அதிர்ச்சி அடைந்துள்ளதாக திருமதி செர்கீவ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இலங்கை மக்கள் நன்றியுள்ளவர்களென்றும், மற்றவர்களை உபசரிப்பதில் மிக்க கவனம் செலுத்துபவர்களென்றும் மக்களைப் பற்றி அபிப்பிராயம் தெரிவித்தார்.

திரு. அக்குண்டோவ் நிருபர்களிடம் தெரிவித்ததாவது:-

உங்களுடைய பழைய தலைநகரங்களைப் பார்வையிட்ட போது [illegible]ருள்ள நீர்ப்பாசன முறை[illegible] என்னை மிகவும் கவர்ந்து[illegible]டன. நாலு வருடகாலத்திற்கு முன்னரே உங்கள் மக்கள் சிறந்த பொறியிலாளர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கு அவை சான்று பகிர்கின்றன. நான் மேயர் என்ற கோதாவில் சுகாதார வசதிகள் பற்றி அக்கறை கொண்டு அக்கண்ணோடு நோக்குகிறேன். ஆசியாவிலே உள்ள சுகாதாரமான நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

## சலுகைகள் கோரி எம். பி. க்கள் கடிதம்

கண்டி, ஞாயிறு

தங்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் போதாமலிருப்பதால், அதற்குப் பதில் சில சலுகைகள் அளிக்கப்படவேண்டும் எனக்கோரி முப்பத்தாறு எம்.பி.க்கள் சபாநாயகருக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள்.

கடந்த ஜனவரிமுதலாக எம். பி.க்களுக்கு இரு டெலிபோன்கள் வழங்கப்படவேண்டுமென்றும் இறக்குமதித் தீர்வை இல்லாமல் ஒரு கார் வாங்குவதற்கு அனுமதிக்க வேண்டுமென்றும் மாதத்திற்கு 75 கலன் பெட்ரோலுக்கு தீர்வை க்கட்டண விலக்கு அளிக்கவேண்டுமென்றும் எம். பி.க்கள் அக்கடிதத்தில் கேட்டுள்ளார்கள.

இம்மாதம மந்திரி கூடவிருக்கும் சபைக்கமிட்டியில் இக்கடிதம் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

## ராணியின் விஜயம்

லண்டன், பெப். 1

ஆஸ்திரேலியாவுக்கும் நியூஸிலாந்துக்கும் விஜயம் செய்யும் பொருட்டு. எலிஸபெத் ராணியும் எடின்பரோ கோமகனும் இன்று லண்டனிலிருந்து புறப்பட்டனர்.


## 'ஈழநாடு' கொழும்புக்கிளை

கொழும்பில் 'ஈழநாடு' பத்திரிகையின் விநியோகம் பற்றி தகவல் பெறவிரும்பும் வாசகர்களும் ஏஜண்டுகளும் கீழ்காணும் விலாசத்திலிருக்கும் எமது கிளைக்காரியாலயத்துடன் தொடர்பேற்படுத்திக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர்.

| | |
|---|---|
| நிர்வாகி | The Manager, |
| 'ஈழநாடு' (கொழும்பு) | 'EELANADU' (COLOMBO) |
| சரஸ்வதி மண்டபம், | Saraswathy Hall, |
| லோறன்ஸ் வீதி, | Lorensz Road, |
| கொழும்பு4. | Colombo 4. |

*Phone : 81975*

## விரைவில் எதிர்பாருங்கள்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!



சிவாஜி கணேசன் - பத்மினி

மற்றும் பலர் நடிக்கும்

## புனர்ஜென்மம்

திரைக்கதை-வசனம் ஸ்ரீதர் | டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி | இசை டி.சலபதிர

## இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (அம்பாறை) விஜயா (மட்டக்களப்பு)

எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி

மற்றும் பலர் நடித்த

## ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

டைரக்ஷன் டி. யோகானந்த்

## வெலிங்டன்

(யாழ்ப்பாணம்)

### நாகநந்தினி

## மனோகரா

(யாழபபாணம்)

எம். என். கண்ணப்பா, மாதுரிதேவி, வி. என். ஜானகி, நம்பியார், எஸ். பாலச்சந்தர்

மற்றும் பலர் நடித்த

### தேவகி


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.